No:53:01 Price : Rs:5.00

Herald of Deliverance
விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

JANUARY 2009

தேவன் நம்முடைய சேனாபதி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

தேவனுடைய மிகுந்த கிருபையினால் நாம் இப்புத்தாண்டில் பிரவேசித்திருக்கிறோம். கடந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மோடிருந்து, நம்மைப் பாதுகாத்து நடத்தினபடியால், நாம் அவரை ஸ்தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த ஆண்டு முழுவதும் அவர் நமது குறைவுகளை நிறைவாக்கினார். இப்புத்தாண்டிலும் அவருடைய கரம் நம்மைத் தாங்கி நடத்தும் என்பதை விசுவாசிப்போமாக.

இப்புத்தாண்டைக்குறித்து நான் தனித்து ஜெபித்துக்கொண்டிருந்தபோது கர்த்தர், ''எபேசியர் 4:22-24'' வசனங்களைக்கொண்டு என்னுள்ளத்தில் பேசினார்.

''*உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி*'' (எபே.4:23) என்று பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். இந்த 2009 ஆம் ஆண்டு நீங்கள் பழைய மனுஷனைக் களைந்து, புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவனின் புதிய ஆவி உங்களைப் பரிசுத்த நடக்கைகளுக்குள் நடத்தும்.

''என்னால் தீய சிந்தைகளை, தோல்விகளை ஜெயித்து வாழமுடியாது'' என்று சோர்ந்துபோகவோ, அதைரியப்படவோ வேண்டாம். புதிய எழுப்புதலின் சிந்தை உங்களுக்குள் இந்த ஆண்டு முழுவதும் கிரியை செய்யும். எவ்வித அடிமைத்தனமும் உங்களை ஆண்டுகொள்ளாது. தீமையான கிரியைகளை நீங்கள் ஜெயித்து வாழுவீர்கள். விசுவாசியுங்கள்.

''*உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.*

உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்'' (எசேக்.36:26,27).

ஆம், உங்களது சொந்த முயற்சிகளாலல்ல; அவர் தரும் பரிசுத்த ஆவியின் பெலத்தினாலே—புதிதான ஆவியினாலே—நீங்கள் இவ்வாண்டு எழும்பிப் பிரகாசிக்கமுடியும். இனி ஆவிக்குரிய வாழ்வில் உங்களுக்குத் தோல்வியிராது. ''நான் இவ்வாண்டிலே பரிசுத்தமாய் வாழ விரும்புகிறேன்; கர்த்தர் எனக்குக் கிருபை தருவார்'' என்று விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசிக்கும்போது, அவ்விதமே பெற்றுக் கொள்ளுவீர்கள்.

''*ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்*'' (ஏசாயா 66:2) என்று வேதம் கூறுகின்றது.

ஆம், நம்முடைய கர்த்தர் ஆவியில் நொறுங்குண்டவர்களைத்தான் நோக்கிப்பார்ப்பார். புதிதான ஆவியினால் ஆட்கொள்ளப்படுகிறவர்கள் நிச்சயமாகவே தங்கள் ஆவியில் நொறுங்குண்டு, தாழ்மையை அணிந்து, பரிசுத்தமாக வாழுவார்கள். வேதத்தில் காணும் யோசியா இராஜாவின் வாழ்க்கை இதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

''*நீ கேட்கையில், உன் இருதயம் இளகி, எனக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, எனக்கு முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால், நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்*'' (2 நாளா.34:27).

யோசியா இராஜா பெற்றிருந்த நொறுங்குண்ட ஆவி, புதிதான ஆவி, வசனத்துக்கு நடுங்கும் ஆவியை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். தேவன் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவார். உபத்திரவத்தினால் நீங்கள் ஒருபுறம் நொறுக்கப்படலாம். மறுபுறத்திலோ தேவனது சமாதானம் உங்களுக்குள்ளாக நிரம்பிவழியும்.

அன்பானவர்களே! வேதனை உண்டாக்கும் வழிகளைக் கர்த்தர் சமாதானத்தின் பாதைகளாக மாற்றிப்போடுவார். இவ்வாண்டு முழுவதும் நீங்கள் தேவ சமாதானத்தினால் நிரம்பி வாழ, கர்த்தர் தாமே உங்களுக்கு நிச்சயம் அருள்புரிவார்.

அன்புள்ள

R. K. Sam

தேவனே நம்முடைய சேனாபதி

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம்)

'எல்ஷடாய்' என்று வாக்குப்பண்ணின கர்த்தர் கடந்த 2008 ஆம் ஆண்டு முழுவதும் நம்மோடு சர்வ வல்லவராக இருந்து, நம்மைக் கிருபையாய் நடத்திவந்தார். நம்முடைய குறைவுகளிலும், பல வீனங்களிலும், சுகவீனங்களிலும் அவர் நம்மைத் தாங்கி நடத்தினார். அவருடைய வல்லமை ஒரு போதும் குன்றிப்போவதில்லை. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

"இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்" (2 நாளா.13:12).

ஆம், இந்த 2009 ஆம் ஆண்டு முழுவதும் நமது தேவன் நமக்கோர் சேனாபதியாக நின்று நம்மை நடத்தப்போகிறார். *'சேனாபதி'* என்ற சொல் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பில் *'கேப்டன்'* என்று கூறப்பட்டுள்ளது. *'கேப்டன்'* என்ற சொல், "தலைவன்" என்றும், "இராணுவத் தலைவன்" என்றும் பொருள்படும். சேனாபதியாய் விளங்கும் நமது தேவன் இவ்வாண்டு முழுவதும் நமது வாழ்க்கையின் ஊன்றுகோலாக விளங்குவார்.

எபிரெயர் 2:10 இன்படி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, *"இரட்சிப்பின் அதிபதி"* என்று அழைக்கப்படுகிறார். கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமத்தில் இச்சொல், "Captain of Salvation" என்று காணப்படுகின்றது. அதாவது, "யுத்தங்களிலின்று இரட்சிக்கும் தலைவன்" என்னும் பொருள்படக் கூறுகிறது. ஆம், பரம இராஜ்ஜியத்திற்கு உரியவர்களாக வாழும் நமக்கு இவ்வுலகில் யுத்தங்களும் போராட்டங்களும் உண்டு.

பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோவெனச் சுற்றித்திரிகிறான். இவ்வுலகின் பலவிதமான சத்துருக்களின் போராட்டங்களை ஜெயித்து வாழ, நமக்கோர் சேனாபதி அவசியம். அவரேயன்றி நமக்குத் தேவன் வேறொருவர் இல்லை.

"அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்பட்டார்கள்; யூதா புத்திரரோ தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்து கொண்டதினால் மேற்கொண்டார்கள்" (2 நாளா. 13:18).

யூதா கோத்திரத்தாருக்கும், இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கும் இடையே ஒரு யுத்தம் நடந்தது. அச்சமயத்தில் யூதா கோத்திரத்தார் தங்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்து கொண்டதினால், அந்த யுத்தத்தில் வெற்றிபெற்றனர். இப்புத்தாண்டில் நாம் தேவனை முழு இருதயத்தோடு நம்பி, அவரைச் சார்ந்துகொள்ளுவோமானால், அவர் நமக்குச் சேனாபதியாக இருந்து, நம்முடைய யுத்தங்களை நடத்துவார்; சத்துருக்களின் மேல் வெற்றிகொள்ள உதவிசெய்வார்.

சேனாபதியின் அரிய குணநலன்களை கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பாகிய, *"கேப்டன்"* என்றுள்ள சொல்லின் அடிப்படையில் கீழே காண்போம்.

சேனாபதி வல்லமையுடையவர்

"பின்னும் யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார்; உருவின பட்டயம் அவர் கையில் இருந்தது; யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான்.

அதற்கு அவர்: அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார்; அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு, அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்னவென்று கேட்டான்" (யோசுவா 5:13,14).

இங்கு, *'சேனையின் அதிபதியாய்'—'கேப்டனாய்'*—வந்த கர்த்தருடைய வல்லமையை அறி

கிறோம். 'கேப்டன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இராணுவத் தலைவன் என்றும் பொருளுண்டு அல்லவா? *'சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன்'* என்றுள்ள சொற்கள் இங்கு, இராணுவத் தலைவனை உருவகப்படுத்துகின்றன.

இஸ்ரவேல் ஜனங்களுக்காக யுத்தஞ்செய்து, எரிகோ பட்டணத்தை அவர்களிடம் ஒப்புக்கொடுக்கவே தேவன் சேனாபதியாய் அங்கு வந்து நின்றார். யோசுவா 6 ஆம் அதிகாரத்தில் ஒரு பெரிய வெற்றி முழக்கத்தைக் காண்கிறோம். இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய சுயபலத்தினால் எரிகோவை வெற்றி கொள்ளவில்லை. சேனாபதியாய் வந்து உதவின கர்த்தரால்மட்டுமே வெற்றிவாகை சூடினர். சேனாபதியாகிய தேவனின் வல்லமையை அறிந்து கொள்ள, நாம் நமது கைகளில் பட்டயத்தை எடுக்க வேண்டும்; அடுத்து, தாழ்மையும் பரிசுத்தமும் உடையவர்களாய்க் காணப்படவேண்டும்.

"உருவின பட்டயம் அவர் கையில் இருந்தது" (யோசுவா 5:13);

ஆம், சேனாபதியின் கையிலிருக்கும் பட்டயம் நமது பட்டயமே. நியாயாதிபதிகள் 7:20 இல் *"கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்"* என்று நாம் காண்புது, இக்கருத்தினைத் தெளிவு படுத்துகின்றது. எபேசியர் 6:17 இன்படி, தேவ வசனம்தான் நமது ஆவிக்குரிய பட்டயமாகும்.

"அவனுடைய (பிசாசினுடைய) *தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே"* (2 கொரி. 2:11). பிசாசினுடைய யோசனைகள், சதித்திட்டங்கள், கண்ணிகள் அனைத்தையும் நாம் மேற்கொள்ள, தேவ வசனமாகிய பட்டயம் நமக்குத் தேவை.

இயேசு கிறிஸ்து பிசாசின் கண்ணிகளை வேத வசனமாகிய பட்டயத்தால்தான் வென்றார். நாமும் வேதவசனமாகிய பட்டயத்தை அனுதினமும் அறிக்கை செய்வோம். சத்துருவின் எல்லாப் போராட்டங்களினின்றும் இவ்வாண்டு வெற்றி பெறுவோம்.

'யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்துகொண்டு' (யோசுவா 5:14).

அடுத்து, நாம் செய்யவேண்டியது என்ன? சேனாபதியான தேவனுக்கு முன்பாகத் தாழ்மையுடன் பணிந்து முகங்குப்புற விழவேண்டும்.

"நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்" (5:15). தேவன் தேவாலயத்தில் மட்டுமல்லாது எங்கும் வியாபித்திருக்கிறார் அல்லவோ? வானத்துக்கு ஏறினாலும், பாதாளத்திலே சென்று படுக்கை போட்டாலும் அங்கேயும் அவரது கண்கள் நமது தவறான வாழ்க்கையை உற்றுநோக்கும். அவருக்கு மறைவானது ஒன்றுமேயில்லை. கர்த்தர் நமக்கு முன்பாக நின்றுகொண்டு எல்லாவற்றையும் காண்கிறார் என்கிற சிந்தையும் உணர்வும் எப்போதும் நமக்குள் காணப்படவேண்டும்.

இவ்வித உணர்வு நம்மைப் பற்றிப் பிடிக்குமானால் கர்த்தருக்குப் பிரியமில்லாதவைகளை அகற்றுவோம். அசுத்தமான வாழ்க்கை வாழவே மாட்டோம்.

அன்பானவர்களே! இவ்வாண்டு முழுவதும் கர்த்தர் நமது சேனாபதியாய் நமக்கு முன்னின்று நமது யுத்தங்களை நடத்துவார். நாம் தேவனுக்கு முன்பாகத் தாழ்மைப்படுவோம். அவர் சமுகத்தில் முகங்குப்புற விழுவோம். பரிசுத்தமாக வாழமுற்படுவோம்.

சேனாபதி தம்முடைய ஜனங்களை நடத்திச்செல்கிறவர்

"சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும்போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே; கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள்" (2 சாமு.5:2).

"இஸ்ரவேலின்மேல் தலைவனாயிருப்பாய்" என்று தாவீதைக்குறித்து இங்குக் கூறப்பட்டுள்ளது காண்க. இவ்வசனத்திலும் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமம் *'கேப்டன்'—'தலைவன்'* என்றுதான்

மொழிபெயர்த்துள்ளது. தலைவனின் வேலை எப்போதும் ஜனங்களை நடத்துவதன்றோ? *"இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே"* என்று இவ்வசனத்தில் கூறியுள்ளது முக்கியம் வாய்ந்தது.

"இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்" (2 சாமு.5:1) என்று இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதிடம் கூறினர். இது இஸ்ரவேலருக்கும் தாவீதுக்குமிடையே காணப்பட்ட நெருங்கிய ஐக்கியத்தையும் நல்லுறவையும் தெளிவிக்கின்றது.

அன்பானவர்களே! நம்மை நடத்தும் நமது தலைவர் சேனாபதியாம் இயேசு கிறிஸ்து. இப்புத்தாண்டு முழுவதும் நாம் நமது சேனாபதியாகிய இயேசுவோடு நெருக்கமான ஐக்கியம் கொள்ளுவோம். ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் இடைவிடாது தரித்திருந்து, அவரோடுள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்ளுவோம். நமது எல்லா இக்கட்டு நேரங்களிலும் திகைப்பின் பாதைகளிலும், "நீரே எங்களை நடத்தும்" என்று கேட்போம். அவர் நமது தலைவனாய் நமக்கு முன்பாகக் காணப்பட்டு, நம்மை நல்சமாதானத்துடன் நடத்திச் செல்வார். விசுவாசிப்போமாக.

சேனாபதி நமது இரகசியங்களை விசாரித்து அறிகிறவர்

"அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து, இந்த வாலிபனைச் சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோம்; அவரிடத்தில் இவன் அறிவிக்கவேண்டிய ஒரு காரியம் உண்டு என்றான்" (அப்.23:17).

எருசலேம் பட்டணத்திலே சுவிசேஷ ஊழியத்தைச் செய்த பவுல் அப்போஸ்தலனை அப்பட்டணத்தார் சுற்றிவளைத்து, சேனாபதியின் உத்தரவின்பேரில் கோட்டைக்குள் வைத்திருந்தனர். அங்கு வாழ்ந்த யூதர் அனைவரும் பவுலைக் கொல்லும்படியான சதித்திட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தச் சதித்திட்டத்தை பவுலினுடைய சகோதரியின் மகன் அறிந்து, கோட்டைக்குள் சென்று பவுலுக்கு அறிவித்தான். *"அப்பொழுது பவுல் நூற்றுக்கு அதிபதிகளில் ஒருவனை அழைத்து இந்த வாலிபனை சேனாபதியினிடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோம்"* (அப்.23:17) என்று கூற, அந்த வாலிபன் சேனாபதியிடம் சென்றான்.

"அப்பொழுது சேனாபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனியே அழைத்துக்கொண்டு போய்: நீ என்னிடத்தில் அறிவிக்கவேண்டிய காரியம் என்னவென்று கேட்டான்" (அப்.23:19).

அந்தச் சேனாபதி பவுலைக் குறித்துள்ள இரகசிய சதித்திட்டத்தை விசாரித்து அறிந்து, அவன் தப்புவிக்கப்பட உதவிசெய்தான். இங்கும் *'சேனாபதி'* என்ற தமிழ்ச்சொல்லுக்கு ஆங்கில கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு, *'கேப்டன்'* என்ற சொல்லையே உபயோகித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆம், அன்பானவர்களே! நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வாண்டு முழுவதும் **நமது நம்பிக்கைக்குரிய சேனாபதியாய்—கேப்டனாய்—தலைவனாய்—இருந்து நம்மை விசாரித்து அறிந்து, நமக்கு உதவிசெய்வார்.**

நாம் கர்த்தரிடமல்லாமல் மனிதரிடமோ, அன்றி வேறோர் உலகத்தலைவர்களிடமோ சென்று உதவியை நாடாதிருப்போம். அறிவிக்கவேண்டிய நமது இரகசிய காரியங்களைக் கர்த்தரிடம் ஜெபத்தின் வாயிலாக அறிவிப்போம். நமக்கு விரோதமான இரகசிய சதித்திட்டங்களை நமது சேனாபதி முறியடிப்பார்.

சேனாபதி தவறுகளை மன்னித்து இரங்குகிறவர்

"யெப்தாவை நோக்கி: நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண எங்கள் சேனாபதியாயிருக்கவேண்டும் என்றார்கள்" (நியா. 11:6).

கீலேயாத்தியனாகிய யெப்தாவைக்குறித்து நியாயாதிபதிகளின் புத்தகம் 11 ஆம் அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில் வாசித்து அறியலாம். அவன் ஒரு பரஸ்திரீயின் மகன். கிலேயாத் அவனைப்

பெற்றான். கிலேயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றாள். அவன் மனைவி பெற்ற குமாரர்கள் பெரியவர்களான பின்பு, யெப்தாவுக்குத் தங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரமில்லை என்று கூறி, அவனைத் துரத்திவிட்டனர்.

யெப்தா வீணரான மனுஷரோடு கூடிக் கொண்டு, அவர்களோடு யுத்தத்திற்குச் சென்று, வென்று வருவது வழக்கம். அச்சமயம் அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தஞ்செய்ய வந்தனர். அப்போது கீலேயாத்தின் மூப்பர்கள் யெப்தாவை அழைத்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண நீர் எங்கள் சேனாபதியாயிருக்கவேண்டும் என்றார்கள். இங்கும் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமம் 'சேனாபதி' என்ற சொல்லுக்கு, 'கேப்டன்'—'தலைவன்' என்ற பதத்தையே உபயோகப்படுத்தியுள்ளது.

தனது சுதந்தரங்களைத் தான் அடையக்கூடாதவாறு தன்னைத் தள்ளிவிட்ட தனது சகோதரரது பிழையை யெப்தா முதலில் எடுத்துரைத்தான். எனினும், அவர்களது பிழையை மன்னித்து, அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்களது சேனாபதியாய்—தலைவனாய்—யுத்தத்தை நடத்த சம்மதித்தான். அவ்வாறே அம்மோனியரை வென்று வெற்றியோடு திரும்பினான்.

சேனாபதியாய் விளங்கி வெற்றி வாகை சூடின யெப்தாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்றுண்டு. மெய்யான தலைவர்கள்—சேனாபதிகள்—பிறர் செய்யும் பிழைகளை மன்னித்து, அவர்களுக்கு இரங்குவர். இது போன்றே நமது சேனாபதியாம் இயேசு கிறிஸ்துவும் நமது பிழைகளைப் பொறுத்து, இரங்கி நமக்கு மன்னிப்பார்.

இதனால் நாம் எவ்விதத் தவறுகளை வேண்டுமானாலும் செய்யலாம் என எண்ணக்கூடாது. நமது தலைவரான இயேசு கிறிஸ்துவின் மன்னித்தருளும் அருங்குணத்தைப் பயன்படுத்திப் பிழைகளில் சிக்கிக்கொள்ளவுங்கூடாது.

நமது பிழைகளை மன்னிக்கும் இயேசு வண்டை இவ்வாண்டு அதிகமாக நெருங்குவோம். நமது பிழைகளை ஒத்துக்கொண்டு, அறிக்கை செய்வோம். சீர்பொருந்துவோம். நமது சேனாபதி—தலைவர்—நமக்கு இரங்கி, நம்மை மன்னித்தருளுவார்.

சேனாபதி ஜனங்களுக்குத் தலைவராக விளங்குவார்

"அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின் மேல் வார்த்து, அவனை முத்தஞ்செய்து: கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம்பண்ணினார் அல்லவா?" (1 சாமு.10:1).

'தலைவனாக' என்றுள்ள சொல் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பில் *'தலைவன்'* என்றே கூறுகிறது. இச்செய்தியின் குறிப்புகள் அனைத்தையும் ஆங்கில வேதாகமச் சொல்லின் அடிப்படையில்தான் பார்த்து வருகிறோம் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

"அப்பொழுது சாமுவேல் எல்லா ஜனங்களையும் நோக்கி: கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பாருங்கள், சமஸ்த ஜனங்களுக்குள்ளும் அவனுக்குச் சமானமானவன் இல்லை என்றான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்து: ராஜா வாழ்க என்றார்கள்" (1 சாமு.10:24).

தலைவனுக்குரிய கனத்தையும் மகிமையையும் மக்கள் செலுத்தவேண்டியது அவசியம். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சவுல் இராஜாவை வாழ்த்தி வணங்கியதை இவ்வசனத்தில் காண்கிறோம். நமது தலைவர் இயேசு கிறிஸ்து. அவருக்கு நாம் கனத்தையும் மகிமையும் செலுத்தவேண்டியது அவசியம்.

இந்த 2009 ஆம் ஆண்டு முழுவதும் நமது தேவனை வாழ்த்துவோம்; துதிப்போம்; அவரை ஆராதித்துக் கொண்டே அவருக்காக வாழுவோம். தேவன்தாமே இப்புத்தாண்டு முழுவதும் நமக்கு நல்ல சேனாபதியாக—தலைவராக—இருந்து நம்மை ஆண்டு நடத்துவாராக. ஆமென்.

HE WILL NOT ALLOW YOUR FOOT TO SLIP

(Pastor M.K. Sam Sundaram)

"He will not suffer thy foot to be moved" (Ps.121:3):

The Lord promises you a very bright and prosperous new year and gives you a promise in the verse I have quoted, and also in the verse in Prov.3:26: *"For the Lord ... shall keep thy foot from being taken."*

When I read the verses in Scripture which speak of our foot, I began to think of the importance of our feet in our Christian walk. The devil sets a snare to make us fall into it, but the Lord, who knows his tactics, keeps our feet from falling. He promises, therefore, that He will not allow your foot to stagger.

An analysis of the various kinds of foot mentioned in Scripture will help you to claim the promises for the new year.

The slipping foot

"When I said, My foot slippeth, thy mercy, O Lord, held me up" (Ps.94:18).

One of the ways in which the devil tries to see that Christians fall is to make their foot slip. Normally, one will be able to walk on firm and even ground or on a road surfaced with asphalt without slipping. But if the path you are walking on is slushy or filled with small puddles of water which make the way slippery, you are likely to slip and fall.

The psalmist said, *"I sink in deep mire, where there is no standing"* (Ps.69:2): Perhaps you have also said similar words. You might have wanted to have strong feet to be able to walk without slipping, and yet there were occasions when your foot slipped. But, this new year the Lord assures you that you will not slip in your spiritual life as you walk progressively.

King David knows that the Lord has enlarged the pathway under his feet so that his feet do not slip. He also says with great confidence, *"God is my strength and power: and he maketh my way perfect. He maketh my feet like hinds' feet: and setteth me upon my high places"* (II Sam.22:33,34). The feet of the deer are strong and shaped in such a way that the animal is able not only to run fast and escape being caught by a predator but also to go up a mountain very fast without slipping.

The Lord wants you to choose the perfect way and avoid using the crooked way in your day-to-day life. The Lord promises to deliver you from the situation wherein your foot may slip. In Psalm 38:16 David pleads, *"... Hear me, lest otherwise they should rejoice over me: when my foot slippeth, they magnify themselves against me"*. The enemy waits for your foot to slip. But the Lord will not permit it.

Children of God, decide that throughout the new year you will walk in the broad and perfect path and avoid the crooked way.

Painful feet

"Whose feet they hurt with fetters: he was laid in iron" (Ps.105:18):

Joseph the beloved son of Jacob was sold as a slave to the Midianites by his brothers, and when he was serving the household of Potiphar, he was falsely accused and put in prison where his feet were fastened with iron chains. The trauma he experienced was beyond description. The fetters in his feet hurt him physically, and the humiliation

and shame he had to endure was too much for one who was above reproach. Added to this was the lack of concern on the part of Pharaoh's chief cup-bearer for Joseph who was left to languish in prison for two more years simply because he failed to remember Joseph's kindness in interpreting his dream.

Joseph was endowed with the gift of interpreting dreams, and while in prison, he interpreted the dreams of the chief cup-bearer and the baker of Pharaoh which came true. Joseph requested the chief cup-bearer to remember him when he was reinstated in his former position by Pharaoh, but unfortunately, he forgot Joseph altogether until two years later, when Pharaoh had dreams and wanted the magicians and wise men to interpret them. When none of them could do it, the chief cup-bearer remembered Joseph and told Pharaoh about him. Joseph proved his God-given wisdom by successfully explaining Pharaoh's dream, and thus became the governor of Egypt.

God had a purpose in delaying the release of Joseph from prison. If Joseph had been released earlier, his story would have ended there. But, God exalted him in Pharaoh's court where he was second in command, and gave succour to Jacob his father and the families of his brothers.

Although Joseph suffered pain in his feet because of the iron fetters, he didn't murmur against God. He endured it patiently, and was eventually rewarded for his patience.

There are two reasons for your being imprisoned. One is for a crime you have not committed. The other is because you preach the gospel. Joseph was unjustly accused, and sent to prison, and Paul and Silas were beaten up and put in prison with their feet in stocks because they preached the gospel.

Dear child of God, what is the path you are traversing? Are you unjustly accused in your office? Have people you helped turned ungrateful? Though not virtual imprisonment, your experiences are so painful that you feel you are almost in prison. Do not murmur against God, but be patient. God will certainly deliver you from your desperate situation.

Diseased feet

"And Asa in the thirty and ninth year of his reign was diseased in his feet, until his disease was exceeding great: yet in his disease he sought not to the LORD, but to the physicians" (II Chronicles 16:12).

During the 39th year of his reign, Asa, king of Judah, was afflicted with a disease in his feet. [Though this section is entitled 'diseased feet', in a broad sense it applies to the disease in any part of the body]. Even as the disease became serious, he did not seek the Lord, but sought only physicians. In other words, he failed to depend on God, and he put his trust only on men.

Earlier, Asa had sought the help of God when the Ethiopians came against him, and God gave him victory. But, when the king of Israel came against him, he sought the help of the king of Assyria and not God's help. In the same way, when he had a terrible disease in his feet, he relied ***only*** on physicians.

In the matter of depending solely on God's help we find a sharp contrast between King Asa and King Hezekiah, a descendant of Asa. In II Kings 20:1-11 we are told that Hezekiah was ill and at the point of death. Prophet Isaiah brought God's word to him that he should keep his house in order because he was going to die. Hezekiah prayed to God and wept bitterly. The way Hezekiah humbled himself and sought the Lord

made God heal his disease and extend his life by 15 years.

The God of Hezekiah is our God. Claim the promise He gives you in the new year. He will surely cure you of every disease you are suffering from. He will heal your diseased feet and see that you do not stagger.

Ensnared feet

"Mine eyes are ever toward the LORD; for he shall pluck my feet out of the net" (Ps.25:15).

Snares and nets are used for catching creatures living on land and the sea. The innocent creatures, unaware of the traps set for them, fall into them. Here, the psalmist is in the position of a bird or animal caught in a net. But he has not lost hope. He looks up to the Lord constantly, and is sure that He will pluck his feet out of the net.

In Ps.57:6 we read, *"They set a net for my steps; my very life was bowed down. They dug a pit in my way; into the midst of it they themselves have fallen"* (Amplified Bible).

Comparing himself to an animal being pursued by wild beasts, David the psalmist said that men had stealthily laid a trap for him. Though he felt utterly despondent, his faith was so irrepressible that he could foresee the evil his enemies had planned against him recoiling on themselves.

In Ps.56:6 also we see the plight of the psalmist. His life was set between the men who 'watched his steps' and the God, who knew his wanderings and the cry of his heart. It was the steadfast love and faithfulness of the Lord which he counted on for deliverance from the situation.

The experience of the psalmist is not unique. You may be in a similar situation now. Like the psalmist take comfort in the faithfulness of the Lord, and wait for the fulfilment of His promise for the new year. He will not let your feet stagger nor will He permit them to be caught in a snare, as we see in the case of Daniel the Hebrew youth.

It is not uncommon to see the children of God who are faithful to Him become that targets of their enemies who subtly lay a trap for them. Since Daniel, one of the Hebrew youths brought to Babylon by Nebuchadnezzar, distinguished himself in his exalted position, jealousy appeared among others, and they sought a means of destroying him. They made the king sign a firm decree that for thirty days no one should pay obeisance to any God or man except the king. Any one who disobeyed it would be cast into a den of lions. This was a ploy to trap Daniel who, they knew full well, would never bow before a man.

But Daniel was faithful to God, and he prayed as usual three times a day. Sure enough the punishment was meted out to him, and he was cast into a den of hungry lions. The Lord in His turn was faithful to Daniel, and He saved his life by shutting the mouths of all the lions in the den. The king imposed the same punishment on Daniel's enemies.

Like Daniel of old, even in modern times we find some people having unshakable faith in the saving power of God. During the Second World War there lived a lady in England who refused to move to a less dangerous place saying that she had been living in that house for 20 years praying and praising God. She added that the One who, "neither slumbered nor slept" would keep watch over her and therefore she need not fear any harm.

Dear child of God! How firm is your faith? Remember that the Lord not only makes a

promise, He also keeps it because it is His nature to do so.

Falling feet

"For thou hast delivered my soul from death: wilt not thou deliver my feet from falling, that I may walk before God in the light of the living?" (Ps.56:13).

When the feet are weak, there is a possibility of their giving way resulting in a fall. This is a fall in the literal sense. But David the psalmist does not mean a literal fall. At the conclusion of the psalm he speaks of God's deliverance from death and His preservation from falling which will enable him to walk before God in the light of life.

The phrase 'falling feet' signifies a fall in one's spiritual life. A flash back will reveal the backslidden state of your spiritual life in the past from which you could not be delivered. Do not be dismayed. God promises you that this year He will deliver your soul from death and your feet from that fall.

In Matthew 26:31 we read the words of Jesus to His disciples: *"This very night you will all fall away on account of me, for it is written: 'I will strike the shepherd, and the sheep of the flock will be scattered'"* (NIV). But, Peter confidently told Jesus that even if all fell away, he would not. He also assured Him that he would be with Him through thick and thin, and would rather die with Him than deny Him. But it so happened that he did have a shameful fall when he denied Jesus not once or twice, but three times.

The remorse Peter felt afterwards, and his crying bitterly over his cowardly act took him close to Jesus, who stabilized his falling feet so that under the anointing of the Holy Spirit, he could face the Jews boldly, and preach the message of salvation in the teeth of opposition.

Beloved children of God! If you are spiritually backslidden, come back to the Lord with tears of remorse in the new year. He will revive you and stabilize your falling feet. Claim His promise for the new year that He will not allow your feet to stagger or fall.

The crushed foot

"And when the ass saw the angel of the LORD, she thrust herself unto the wall, and crushed Balaam's foot against the wall: and he smote her again" (Numbers 22:25).

Balak, king of Moab, sent princes as messengers to Balaam and invited him to curse the people of Israel of whom he was fearful. Balaam became aware that they were destined for blessing and felt a divine restraint. Therefore, he told the messengers that the Lord had refused to let him go with them.

Relentless, Balak sent other princes, more numerous and more distinguished than the first with a promise to honour him. But, Balaam insisted that he would do only as God commanded him to do. Then he set out on his donkey, and while he was on his way, the animal, seeing an angel of the Lord standing with a drawn sword in his hand, stubbornly halted and turned off the road into a field. Balaam grew angry and beat his donkey, and she entered a narrow path between two walls. As the angel still remained, she clung to the wall, crushing Balaam's foot against it. Then Balaam beat the donkey a second time and she crouched beneath Balaam as the angel stood in a narrow place with no room to turn this way or that. Then, Balaam beat her a third time. The Lord opened the mouth of the donkey and she questioned Balaam why he beat her. As the dialogue proceeded, the Lord opened Balaam's eyes and he saw the angel with a drawn sword in his hand.

The reason why the Lord intervened in this way was because Balaam's way was perverse. It was his coveteousness which ultimately led to his ruin (II Peter 2:15, Jude 11).

This incident is recorded in the Bible as a warning to many who wish to act according to their own will without waiting upon the Lord to know His will. Acting in a way contrary to God's will is a sin as it is nothing but disobedience to Him.

Young children of God, be careful about your walk. Ask yourselves if your walk is with Jesus. If it is not, He will warn you by crushing your foot and make you confess, as Balaam did, that your way is perverse, and that you have sinned.

The labouring foot

"For the lānd, whither thou goest in to possess it, is not as the land of Egypt, from whence ye came out, where thou sowedst thy seed, and wateredst it with thy foot, as a garden of herbs" (Deut.11:10):

When the children of Israel were in Egypt, they had to irrigate the fields like a vegetable garden using water wheels and pump which were operated by feet, and this was hard labour. In a striking contrast, the land to which God was taking them was a land of mountains and valleys where seasonal rainfalls fertilized the soil and helped the crops to mature and be ready for harvesting. In this, there was no hard labour involved.

This new year the Lord promises to set you free from unproductive labour, and give you His blessings freely and bountifully. V.12 says that the eyes of the Lord will be upon the land from the beginning to the end of the year. The land will yield corn, oil and wine, and you will enjoy prosperity throughout the year. Hallelujah!

ஊழியர் பகுதி

ஜெபவீரன் ஜான் ஹைடு

11. கிறிஸ்துவுக்காகக் கனிகொடுத்தல்

ஜான் ஹைடு இந்தியாவுக்கு வந்தபோது திருச்சபை நம் நாட்டில் ஏற்கனவே ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. சுவிசேஷம், பல திருச்சபை அமைப்புகள், வேதாகம சங்கம்மூலமாகவும், மற்றும் தனிப்பட்ட மிஷனெரிமார்கள், ஊழியர்கள்மூலமாகவும் நாடு, நகரங்கள், கிராமங்கள்தோறும் அறிவிக் கப்பட்டு வந்தது. இவர்களின் பணி மிகவும் சிறப் பான பாராட்டுதலுக்கு உரியது.

ஆனால் நாடு முழுவதிலும் குறிப்பாக, பஞ்சாப் மாநிலத்தில் கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆவிக்குரிய ஜீவியம் அனலற்ற ஒரு நிலையில் இருந்தது. அவர்களுடைய வாழ்க்கை கிறிஸ்தவ ஐக்கியத்திலும், அனுபவத்திலும் வேரூன்றியதாகக் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் கூறப் பட்டுள்ள கிறிஸ்துவின் அன்பு, கிறிஸ்தவ விசுவாசம், பக்தியின் தரம் அவர்களிடையே காணப் படவில்லை. ஆலய ஆராதனைகளிலும் திருச் சபைப் பணிகளிலும் பரிசுத்த ஆவியானவருக்குக் கொடுக்கப்படவேண்டிய கனமும், முக்கியத்துவமும் அவருக்குக் கொடுக்கப்படவில்லை.

எனவே இலட்சக்கணக்கான கிறிஸ்தவ மக்களில், கிறிஸ்து இரட்சகரோடு நெருங்கிய ஐக்கியத்தையும் இரட்சிப்பின் அனுபவத்தையும் பெற்றவர்கள் மிகச் சிலராகவேயிருந்தார்கள். பெரும்பாலானவர்கள் பெயர்க்கிறிஸ்தவர்களாகவேயிருந்து, மீட்கப்படாத நிலையிலேயே இருந்தார்கள் என்று கூறுவது மிகையாகாது. எனவே இந்த மந்த நிலைமாறி, பஞ்சாப் திருச்சபை ஜீவ சக்தியும், புத்துயிரும் பெற்று, கிறிஸ்துவுக்காகக் கனி கொடுக்கும் சபையாக மாறிச் செயல்படவேண்டு

மானால், அங்கே ஒரு மாபெரும் எழுப்புதல் அவசிய மாய் இருந்தது.

இதைக் கண்ணுற்ற ஜான் ஹைடு இந்த மக்களைக்குறித்துப் பெரிதும் மனதுருகினார். மக்கள் பெருமளவில் இரட்சகர் இயேசு கிறிஸ்துவை உண்மையாகவே அறிந்துகொள்ளவும், ஆச்சரிய மான பேரொளியாகிய அவருடைய இரட்சிப்புக்குள் கொண்டு வரப்படவும் வேண்டுமாயின், அவ ருடைய திருப்பணியாளர்கள் அதற்குரிய பெரும் பொறுப்பைச் சுமந்து, அந்த ஒரே நோக்கத்துடனும் ஆர்வத்துடனும் பாடுபட்டாக வேண்டும் என்பதை அவர் திட்டவட்டமாக உணர்ந்தார்.

தாம் கிறிஸ்துவுடன் நெருங்கி இடை விடாது அவருடன் ஜெபத்தில் தரித்திருந்து அவரின் கெத்செமனே அனுபவத்திலும், பாடுகளிலும், ஆத்துமதாகத்திலும் தீவிரமாகப் பங்குபெற உறுதி பூண்டார். சுவிசேஷ ஊழியத்தில் மக்களைத் தனித் தனியாகச் சந்தித்துப் பேசி, உறவாடி அவர்களுக் குப் பாவ உணர்வையும், பாவ மன்னிப்பையும், இரட்சிப்பையும், பாவத்தின்மேல் கிறிஸ்து அளிக்கும் வெற்றியையும்பற்றிப் போதித்தல், திரு வசனத்தின் பேரில் அருளுரையாற்றுதல், பெரு மளவில் ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்கள் நடத் துதல் முதலியவை மிகவும் விசேஷமான, அவசிய மான கிரியைகளாகும்.

இந்தச் செயல்முறைகளில் மிகுந்த பல னும் சிறந்த வெற்றியும் பெறவேண்டுமானால் நற்செய்திப் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு ஊழியரும் தூய ஆவியானவரின் அருளையும், ஒத்தாசையையும் பெற்றுக்கொள்ள வேண்டியது அத்தியாவசியம். உள்ளத்தில் தூய்மையுடன், நம்மை முழுவதுமாய் இரட்சகர் இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, தனிப்பட்ட முறையில் அவரோடு ஒன்றிய ஜெபஜீவியத்தினால் அவருடன் நெருங் கிய தொடர்பு கொள்வதன்மூலமாகவே தூய ஆவி யானவரின் அருளைப்பெற்றுக்கொள்ள முடியும்.

ஆண்டவர் தம் திருவசனத்தின்மூலம் இந்த அறி வைத் தம் அடியான் ஜான் ஹைடுவுக்கு வெளிப் படுத்தியிருந்தார். அதை நடைமுறையிலும் கடைப் பிடிக்க உறுதி பூண்டவராய், மக்களைக் கிறிஸ்து வுக்காக ஆதாயப்படுத்துதலையே தம் வாழ்க்கை யின் ஒரே நோக்கமாகத் தெரிந்துகொண்டார்.

அப்போது சியால்கோட் நகரத்தில் ஏற் கனவே ஜெப வாஞ்சை நிறைந்த திருப்பணியாளர் களாலும் திருச்சபை மக்களாலும் ஆரம்பிக்கப் பட்டு, மக்களை ஜெப ஜீவியத்தில் ஊக்குவித்து, சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்த பஞ்சாப் ஜெப ஐக்கியம் (Punjab Prayer Union) என்ற அமைப்பையே ஜான் ஹைடு தன் பணித்தளமாகத் தெரிந்தெடுத்து, அங்கே அவர் ஆற்றிய பணியை யும், மக்கள் ஆண்டாண்டுதோறும் அங்கே திரள் திரளாகக்கூடி ஜெபத்தில் ஐக்கியம் பெற்று, தூய ஆவியானவரின் வல்லமையினால் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதையும்பற்றி நாம் ஏற்கனவே அறிவோம்.

சியால்கோட் நகரில் பெற்ற எழுப்புதல் ஏதோ தற்செயலாகத் தோன்றியது என்றோ, அல்லது அது பரலோகத்திலிருந்து எப்படியோ திசைமாறி அடித்த ஓர் அலை என்றோ நினைப்பது மிகவும் தவ றான ஒரு கருத்து ஆகும்.

ஆண்டவரால் மிக வல்லமையாக உப யோகிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் கொண்டு வரப்படு வதற்குக் காரணமாய் இருந்த சார்லஸ் பின்னி (Charles G. Finney) என்ற பக்தன் இவ்வாறு கூறுகிறார்: “நிலத்தில் விதைக்கப்பட்ட கோதுமை விதைகள் எப்படி பெருமளவில் கோதுமைப் பயி ராகப் பலனளிக்கின்றனவோ, அதைவிட மக்களி டையே தோன்றும் ஆவியின் எழுப்புதல் பெரிய அற்புதம் என்பதல்ல; இரண்டும் பலாபலத்தின் காரணம்—பலாபலன் (cause and effect) என்ற தத்துவத்தின்படியே அடிப்படையிலேயே நடை

பெறுகின்றன." (A revival is no more a miracle than a crop of wheat).

மக்களுக்காகப் பாரம் நிறைந்த ஆத்துமாக்கள், வெற்றி பெறுவது, அல்லது சாவது அவசியமானால் வெற்றி பெற்றுசாவது என்ற மன உறுதியுடன் விண்ணப்பங்களுடனும், மன்றாட்டுகளுடனும் ஆண்டவருடன் ஜெபத்தில் போராடும்போது, பரத்தில் இருந்து வல்லமை புறப்பட்டு மகத்தான எழுப்புதல் நடைபெறுவது நிச்சயம். இவ்விதமான, பரிசுத்த ஆவியானவரின் கிரியை எவ்விடத்திலும், எந்தச் சமுதாயத்திலும் நடைபெற முடியும்.

"யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம்பண்ணப்படுகிறது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்" என்பது ஆண்டவரின் வாக்கு (மத்.11:12).

பக்தன் ஜான் ஹைடுவின் ஜெப ஜீவியத்திலும், அவருடைய திருப்பணியிலும் இந்த உண்மை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் நிரூபிக்கப்படுகிறது. அவர் சிறந்த ஒரு ஜெப வீரனாகப் போற்றப்படுவதை நாம் அறிவோம். ஆனால் அவருடைய ஜெப வாழ்க்கை ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது மிக அவசியம். அவர் தன் ஜெபஜீவியத்துக்கு இரட்சகர் இயேசு கிறிஸ்துவையே தனக்குத் தலைசிறந்த முன்மாதிரியாகக் கொண்டார்.

மக்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும் திருப்பணியில் நல்ல பலன் பெறவேண்டுமாயின் கிறிஸ்துவின் சிந்தனையுடன், சிதறுண்ட ஆத்துமாக்களுக்காக அவர் அனுபவிக்கும் பசி தாகத்திலும், அவருடைய வாஞ்சையிலும், பெருமூச்சுகளிலும் நாம் அவருடன் பங்கு பெறவேண்டும். அவருடைய கெத்செமனே அனுபவத்தில் நாமும் பிரவேசிக்கவேண்டும்.

இந்த உணர்வை ஜான் ஹைடு தன் உள்ளத்தில் உறுதியாகப் பெற்றிருந்தார். அவருடைய ஜெபங்களில் சுயம், சுயநலம், சுயவிருப்பம் (Self, Selfishness, Self-will) என்பவற்றிற்கே இடமில்லை. அவர் தன்னுடைய பக்தி விருத்திக்காகவோ, தன்னுடைய பக்திப் பரவச இன்பத்துக்காகவோ, அல்லது தன்னுடைய மன நிம்மதிக்காகவோ ஒருபோதும் ஜெபித்ததில்லை. கோடிக்கணக்கான இந்நாட்டு மக்கள் இரட்சகர் இயேசுவைப் பற்றியதான மெய்ஞானம் பெற்று இரட்சிப்படைய வேண்டும் என்ற கவலையும், கரிசனையும், அங்கலாய்ப்புமே வாழ்நாள் முழுவதும் அவருடைய பங்காக இருந்தது.

அவர் பஞ்சாப் மாநிலத்துக்கு முதன் முதலாக வந்தபோது அங்கு ஏற்கனவே பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற அநேக மிஷனெரிமார்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பக்தி நிறைந்த வாழ்க்கையும், சுவிசேஷப் பணியில் அவர்களுடைய உழைப்பும், ஆர்வமும் மிகச்சிறந்த பாராட்டுக்கு உரியனவாகவேயிருந்தன.

ஆனால் ஜான் ஹைடுவின் ஜெபஜீவியத்தைக் கண்ட அவர்கள் தங்கள் உள்ளங்களில் புதுமலர்ச்சி பெற்றவர்களாய், தங்கள் ஆன்மீக வளர்ச்சியையும், தங்கள் திருப்பணியையும் குறைவுள்ளவையாகக் கண்டு, தங்களைத் தற்பரிசோதனை செய்யும்படி ஏவப்பட்டார்கள். அவர்களுடைய ஜெபஜீவியத்தில் புதுத்திருப்பமும், அவர்களுடைய திருப்பணியில் புதிய மன நோக்கும் ஏற்பட்டன. ஜான் ஹைடு தம் அரும்பணியினால் பஞ்சாப் திருச்சபையில் உள்ள ஜெபவீரர்களான ஊழியர்கள் மத்தியில் ஒரு புதிய ஜெபயுகத்தையே (A new era of prayer) தொடங்கினார் என்றும் அங்கே இந்திய மக்களின் ஆத்மீகத் தேவைகளுக்காக பரமகிருபாசனத்தண்டையில் வல்லமையான ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன என்றும் அருட்திரு. பெங்வெர்ன் ஜோன்ஸ் கூறியிருக்கிறார்.

ஜான் ஹைடுவின் ஆர்வத்தினாலும் முயற்சியினாலும் அவருடைய சகபணியாளர்களின்

சிறந்த ஒத்துழைப்பினாலும் சியால்கோட் நகரில் முதலாவது வருடாந்திர சபை கூடுதல் 1904 ஆம் ஆண்டு, நடைபெற்றது என்பதை ஏற்கனவே நாம் அறிவோம். அப்போது ஆண்டவர் பிரத்தியேக மான முறையில் தம் அடியானின் உள்ளத்தில் பேசி, ஓர் ஊழியன் மக்களின் மீட்புப்பணியை மேற் கொண்டு முன்னேறிச் செல்லுமுன் பரிசுத்த ஆவி யானவரின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளக் காத்திருத்தல் அவசியம் என்ற சத்தியத்தை அவருக்கு வெளிப்படுத்தினார்.

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப்.1:8).

சியால்கோட் நகரில் நடைபெற்ற இந்த முதலாம் சபை கூடுதலில் ஹைடு பரிசுத்த ஆவியான வரின் அருளைப்பெற்றுக்கொண்டார் என்பதையும், விசுவாசத்தினால் நீதிமான் பரிசுத்தமாக்கப்பட்டு, பிழைப்பான் என்ற திருவசனத்தில் பொதிந்துள்ள ஆண்டவரின் திட்டத்தையும் தான் தெளிவாகப் புரிந்துகொண்டார் என்பதையும் அவரே கூறியிருக் கிறார். தன் உள்ளத்தில் ஆண்டவரால் தொடப் பட்டதையும், பரலோகத்தின் பேரொளியால் தான் பெற்ற பரவசத்தையும் உணர்ந்த அவர் அந்த மாநாட்டின் முடிவில், "இனி நான் ஒருபோதும் இந்த உன்னத வெளிப்படுத்தலை இழக்க மாட்டேன்" என்று பேருவகையுடன் கூறினார். (I must not lose this vision). இந்தப் பிரதிக்கினையின்படியே, அவர் தம் பரலோக எஜமான் தனக்கு அருளிய காட்சியை யும், வெளிப்படுத்துதலையும் இழந்துபோகாமல், தாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திர வானாய் நடந்து, கிருபைமேல் கிருபை பெற்றவ ராகத் தம் திருப்பணியில் முன்னேறிச் செல்பவ ராயிருந்தார்.

(தொடரும்)

வேத பாடம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு

தொடர்ச்சி

பாடம் 10

(உன்னதப்பாட்டு 3:3-5)

வசனம் 3

"நகரத்திலே திரிகிற காவலாளர் என்னைக் கண்டார்கள்: என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா என்று அவர்களைக் கேட்டேன்" (உன்.3:3).

இங்கு நாம் காண்கின்ற காவலர், நகரத்தைக் காக்கிற கூட்டத்தினர் ஆவர். ஆவிக்குரிய முறை யிலே இவர்கள் யார்? தேவன் நியமித்த ஊழியர்கள் ஆவர்.

"மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தி னாலே அவர்களை எச்சரிப்பாயாக" (எசேக்.3:17).

எசேக்கியேல் தீர்க்கதரிசியைத் தேவன் இஸ்ரவேலருக்கு ஒரு காவலாளனாக வைத்தார். அவனது வேலை என்ன? இஸ்ரவேல் ஜனங்களை எச்சரித்து, வழிகாட்டி நடத்துவதாகும். இந்நாட் களில் பலவித பட்டங்களோடு அழைக்கப்படும் தேவ ஊழியர்கள் யாவரும் கர்த்தர் தமது சபைக்காக நியமித்த காவலரே. ஊழியர்களைக் காவலர் என்று அழைப்பது சாலவும் ஏற்புடைத்து.

"உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்க ளாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங் குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய் தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (எபி.13:17).

விசுவாசிகளின் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணும் ஊழியர்கள், போதகர்கள் அனைவரும் விசுவாசிகளை நடத்துவதற்குத் தேர்ச்சி பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தன் நேசருக்காக ஏங்கி, அலைந்து திரிந்துகொண்டிருந்த மணவாட்டியை, நகரத்துக் காவலர்கள் கண்டு, வழிகாட்டியிருக்கக்கூடும். அதற்குமேல் அவர்களால் யாதொரு உதவியும் செய்ய முடியவில்லை. நேச மாணவாளனைச் சந்திக்க அவள்தான் முயற்சி எடுத்திருக்கவேண்டும். காவலரைச் சார்ந்து அவள் நேசரைத் தேடமுடியாது.

ஆம், காவலரான ஊழியரைச் சார்ந்து விசுவாசிகள் வாழ்தல்கூடாது. இயேசுவைத் தேட, அவரைக் கிட்டி நெருங்க, ஊழியக்காரரையே சார்ந்து நின்றால், ஏமாற்றமே அடைவர். ஊழியர்கள் உங்களுக்கு நல்ஆலோசனைதந்து ஜெபிக்கத்தான் முடியும். ஆனால் விசுவாசிகளோ, தேவ ஊழியரை மதித்து, கீழ்ப்படிந்து அடங்கவேண்டும் என்றும் வேதம் கூறுகிறது. மேய்ப்பரின் அறிவுரையும், ஆலோசனையும் அவசியமாகக் காணப்படினும், விசுவாசிகள் தாமே சென்று, ஆண்டவரைக் கண்டுபிடித்து அவரோடு ஐக்கியம் பாராட்டவேண்டும்.

ஆசிரியர்கள் தம் வகுப்பு மாணவர்கட்கு நன்கு போதிக்கலாம். ஆனால், தேர்வு எழுதவேண்டியது மாணவனது பொறுப்பு மட்டுமே. அதுபோல, விசுவாசிகள் மேய்ப்பனாகிய காவலரின் அறிவுரையின்படி நடந்து, ஆண்டவராகிய இயேசுவுக்குப் பிரியராய் விளங்குவது, அவர்களது தேட்டத்தினால் அமைந்த அனுபவத்தினால்மட்டுமே.

வசனம் 4

"நான் அவர்களை விட்டுக் கொஞ்சதூரம் கடந்துபோனவுடனே, என் ஆத்தும நேசரைக் கண்டேன்; அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்" (உன். 3:4).

ஆம், மணவாட்டி ஆவிக்குரிய வழியில் யாரையும் சாராது, தனித்து தன்னையே நாடும்படி விரும்புகிறார் நேசர். காவலரைவிட்டுச் சிறிது தூரம் நடந்து சென்றவுடனே, அவள் தன் ஆத்தும நேசரைக் கண்டுபிடித்துவிட்டாள். மட்டுமன்றி, அவரை விடாமல் பற்றிக்கொள்ளவும் செய்தாள்.

தான் இதுவரை செய்த பிழையை இப்போது உணர்ந்துகொண்டாள் அவள். எண்ணவேண்டிய அளவுக்கு அதிகமாகத் தன்னைக்குறித்து எண்ணிப் பெருமிதம்கொண்டது, தவறு என ஒத்துக்கொண்டாள்.

ஓர்பாள் தன் மாமியாராகிய நகோமியைப் பற்றிக்கொள்ளாது, முத்தமிட்டுச் சென்றாள். ஆனால் ரூத்தோ தன் மாமியாரை விடாமல் பற்றிக்கொண்டாள் என்று வேதத்தில் காண்கிறோம். இது விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவை இறுகப் பற்றிக்கொள்ளவேண்டியதற்கு ஒப்பனையாகும்.

"உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3).

"உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை; தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்" (ஏசாயா 64:7).

"இந்நாள்மட்டும் நீங்கள் செய்ததுபோல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்டிருங்கள்" (யோசுவா 23:8).

"ஆனாலும் நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்

கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவரை உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் சேவிக்கிறதற்காக, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும் நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யும்படிமாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள் என்றான்'' (யோசுவா 22:5).

''உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன்''; ''உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவன்''; ''கர்த்தரைப் பற்றிக்கொண்டிருங்கள்''; ''அவரைப் பற்றிக்கொண்டிருந்து'', என்றுள்ள சொற்றொடர்களை இங்குக் காண்கிறோம். ஆம், ஆண்டவரோடு ஐக்கியம் பாராட்டி வாழவே சபை விசுவாசிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்தச் சொற்கள் உறுதிப்படுத்துகின்றன. அவரைப் பற்றிக்கொண்டவர்கள் மட்டுமே கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்கை அடையமுடியும்.

''... அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டு வந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்'' (உன்.3:4).

'தாயின் வீடு' என்பது விசுவாசிகள் அங்கம் வகிக்கும் தங்களது சபையாகும். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சொந்த சபை உண்டு. அங்கேதான் நீங்கள் பிறந்தீர்கள். ஏதோ ஒரு அங்கத்தினர் வாயிலாக, உங்களுக்குள் ஆவியானவர் கிரியை செய்திருக்கக்கூடும். அதனால்தான், நீங்கள் இப்போது சபையில் அங்கம் வகிக்கிறீர்கள். அதுவே விசுவாசிகளுடைய தாயின் வீடாகும். அச்சபையே நீங்கள் அமர்ந்திருந்து, ஜெபித்து, தேவபிரசன்னத்தை உணர்ந்து மகிழும் இடம் ஆகும்.

''கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்'' (1 கொரி.4:15).

இங்கு, அப்போஸ்தலனாகிய பவுல் *''கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்''* என்று கூறியுள்ளதைக் காணவும். ஆம், சபையாகிய தாயின் வீட்டிலே, விசுவாசிகள் ஞானப்பாலாகிய தேவ வசனத்தால் போஷிக்கப்பட்டு, வழிநடத்தப்படுகின்றனர்.

''உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல,

நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்'' (1 தெச.2:7,8).

'தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல' என்றுள்ள சொற்றொடரைக் காண்க. சபையின் தலைவன் தன்னை ஒரு தாய்க்கு ஒப்பிட்டுப் பேசுகிறது இங்குக் குறிப்பிடத்தக்கது.

''தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்'' (1 தெச.2:12).

"தகப்பனைப்போல புத்தியையும் தேறுதலையும் எச்சரிப்பையும் சொன்னது" என்று பவுல் கூறியுள்ளதால், தெசலோனிக்கே சபை அவ்வூர் மக்களுக்கு ஒரு தாயின் வீடுபோலவும், தகப்பனின் ஆலோசனையில் வாழுமிடம்போலவும் அமைந்தது என்பது தெளிவு. இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு, தாம் அங்கம் வகிக்கும் சபை தாயின் வீடாகும். **அவர்கள் தாயின் வீட்டோடு அதாவது, சபையோடு ஐக்கியம் பாராட்ட, எப்போதும் கவனம் செலுத்தவேண்டும். இன்றேல் அவர்கள் தங்கள் இரட்சிப்பையே இழக்கநேரிடும்.**

'தன்னைப் பெற்றவளின் அறை' என்பது நமது ஆண்டவராகிய இயேசுவோடு தனித்து உறவாடும் நமது ஜெப அறையைக் குறிக்கும். "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு" என்று, மத்தேயு 6:6 இல் இயேசு தாமே கூறியுள்ளார்.

விசுவாசிகள் தங்களது ஜெபஅறையில் தான் தேவனுடைய ஆறுதலையும் ஆலோசனையையும், தேவனோடுள்ள ஐக்கியத்தையும், நேசரது இன்பமான சமுகத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

தேவ சபையிலும், ஜெப அறையிலும் விசுவாசிகள் தேவனோடுள்ள தனிப்பட்ட இன்பமான உறவை அநுபவிக்கமுடியும் என்பதை, 'தாயின் வீடும்', 'பெற்றவள் அறையும்' தெளிவிக்கின்றன.

5 ஆம் வசனம்

"எருசலேமின் குமாரத்திகளே! எனக்குப் பிரியமானவளுக்கு மனதாகுமட்டும் நீங்கள் அவளை விழிக்கப்பண்ணாமலும் எழுப்பாமலுமிருக்கும்படி, வெளிமான்கள்மேலும் வெளியின் மரைகள்மேலும் உங்களை ஆணையிடுகிறேன்" (உன்.3:5).

இந்த வசனத்தின் விளக்கத்தைக்குறித்து ஏற்கனவே, உன்னதப்பாட்டு 2:7 இல் விளக்கமாகக் கற்று அறிந்துள்ளோம். ஆவிக்குரிய வாழ்வில் குறைந்த அநுபவமுடையவர்கள், முன்னேறும் விசுவாசிகளைத் தடைசெய்யாதிருக்கும்படி மணவாளன் ஆணையிடுகிறார். ஓர் குறிப்பிட்ட காலம் வரை, தம்மோடுள்ள ஐக்கியத்தில் விசுவாசிகள் வளர்ந்து, ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, ஆண்டவர் விரும்புகிறார் என்பதே இதன் விளக்கமாகும்.

உன்னதப்பாட்டின் இரண்டாம் பகுதி, 3 ஆம் அதிகாரத்தின் 5 ஆம் வசனத்தோடு முடிவு பெறுகிறது. ஆதி அன்பில் வீழ்ச்சியடைந்திருந்த மணவாட்டி இப்போது நேசர் இருக்குமிடத்தைக் கண்டு, அவரைவிடாமல் பற்றிக்கொண்டாள். அவரை நெருக்கமாகக் கட்டிப்பிடித்துவிட்டாள். மீண்டும் இனிமையான அனுபவத்திற்குள் வந்துவிட்டாள்.

நேசரோடுள்ள ஆதியன்பில் வீழ்ச்சி கண்ட விசுவாசிகளே! நீங்கள் திரும்பவும் எழும்புவீர்களாக. நேசரிருக்கும் இடத்தைக் கண்டு, அவரை விடாமல் பற்றிக்கொண்டு, அவரோடுள்ள மகிமையான, இனிமையான அனுபவத்திற்குள் ஐக்கியம் பாராட்டி மகிழுவீர்களாக.

(தொடரும்)

பெண்கள் பகுதி

ஒரு கைதி என்றாலும்

காரி டென் பூம் அம்மையார்

5. உகட் சிறைதனிலே ஓர் ஒளிக்கதிர்

"உங்கள் சொந்த ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள்; ஒவ்வொருவரும் உங்கள் சொந்த ஆடைகளை அணிந்து தயாராகுங்கள்" என்ற சத்தம் சிறையின் அமைதியைக் கிழித்துச் சென்றது. சொந்த ஆடையை அணிந்துகொள்வதென்றால், சிறைவாசிகளுக்குச் சொல்லொணா மகிழ்ச்சியளிக்கும் காரியமாகும். காரணம், சொந்த ஆடை ஒரு சுதந்தரச் சின்னமாகக் கருதப்பட்டது.

ஆகவே, எங்கே பிந்திவிடப் போகிறதோ என்று பயந்துகொண்டு, அவசரம், அவசரமாக நான் என் சொந்த ஆடையை உடுத்திக்கொண்டேன். ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் உடைமைகளையும், ஒன்றாகச் சேர்த்துக் கட்டி வைத்துக்கொள்ள

வேண்டும் என்ற கட்டளையும் பின்னர் பிறந்தது. சிறையில் உள்ள எங்கள் உடைமைகளை எங்களுடன் எடுத்துக்கொண்டு தயாராக நிற்கவேண்டும் என்ற செய்தி முன்னர் எழுந்த மகிழ்ச்சி வெள்ளத்தைத் தடுத்து நின்றது. பின்னர் என்ன நடக்க இருக்கின்றதோ? என்று அறியாது திகைத்தோம். எல்லாரும் வெளியேவந்து வரிசையாக நிற்கும்படி கட்டளை தொனித்தது.

சிறையை விட்டு வெளிவருவதென்றால், அதுவும் ஒருவகையில் ஒரு சிறிய விடுதலை தானே. வெளியே வந்ததும், அச்சிறையில் உள்ள பிற கைதிகளைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பெத்சீயைக் கண்டு ஓடோடிப் போய், கட்டித் தழுவிக்கொண்டேன். எத்தனையோ நாட்களுக்குப் பின்னர் பெத்சீ என்ற என் சகோதரியைக் கண்டதும் ஆனந்தக் கடலில் மூழ்கினேன். இதற்கு இடையில் நடந்திருந்த அநேக சோக சம்பவங்களால் நாங்கள் முதலாவது வாய்திறந்து பேச ஆரம்பித்தால், எங்கே துயரம் தடுத்து நிறுத்த முடியாது கரை புரண்டு விடுமோ என்று தயங்கி, தயங்கிப் பேசிக்கொண்டிருந்தோம். காவல் அதிகாரிகள் வெகு பரபரப்புடன் போக்குவரத்து வசதிகளைக் கவனித்துக் கொண்டு இருந்தபடியால் கைதிகள் ஒருவரோடு ஒருவர் பேசுவதை அவர்களால் கண்டித்து நிறுத்த முடியாது போய்விட்டது. ஆகவே நாங்கள் அஞ்சி, அஞ்சி, பேசவேண்டியதை எல்லாம் விரைந்து, விரைந்து பேசுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம். நெடுநாள் தண்ணீர் காணாது, தாகமுற்றிருப்பவன் தண்ணீரைக் கண்டதும் ஆவலுடன் எழுந்து தண்ணீரை அள்ளி, அள்ளிக் குடிப்பதைப் போன்று, ஒவ்வொருவருடைய இதயத்திலும் தேங்கியுள்ள செய்திகளை எல்லாம் வாரி, வாரி விழுங்கிக் கொண்டிருந்தோம்.

பெத்சீ என்ற என் சகோதரியும், நானும் எப்பொழுதும் வாழ்க்கையில் மனமொத்தவர்களாய் ஒருவரை ஒருவர் நேசித்து, ஒருவரை ஒருவர் நன்கு மதித்து, இணைந்து, பிணைந்து அன்புற்று, இன்புற்று, வாழ்வது வழக்கம். ஆகவே, இப்பொழுது, நெடுநாள் சிறைவாசத்திற்குப்பின் ஒருவரை ஒருவர் கண்டதும் இறுகத் தழுவிக்கொண்டு, இதயபூர்வமாகச் செய்திகளைப் பரிமாறிக்கொண்டிருந்தோம். எங்களைப் பெரிய பஸ் வண்டிகளில் ஏற்றி, ஹேக் பட்டணத்திற்கு வெளியேயுள்ள ஒரு சிறிய புகை வண்டி நிலையத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

பெத்சீயும் நானும் புகைவண்டியில் பெரிதும் முயன்று ஒரே பெட்டியில் எப்படியோ அடித்துப் பிடித்து ஏறிக்கொண்டோம். இருவரும் தோளோடு தோளாக அமர்ந்து, இன்பமாக உரையாடிக் கொண்டே இருந்தோம். 50 ஆண்டுகளாக, நாங்கள் ஒன்றாக, ஒரே வீட்டில் பின்னிப் பிணைந்து வாழ்ந்தவர்கள் அல்லவா? பார்த்தவர்கள் எல்லாரும் எங்கள் ஐக்கிய அன்பு உறவைக் கண்டு அதிசயித்துப் பேசிக்கொண்டார்கள். தந்தையை நினைத்த போதோ இரண்டுபேரும் கண்ணீர் பெருக்கி நின்றோம். அப்பாவின் அன்புக்காக, ஆண்டவரைத் துதித்துக்கொண்டோம்.

அதிகாலை நான்கு மணிக்கு நாங்கள் உகட் நகர் வந்தடைந்தோம். சிவனிங்கன் சிறையில் இருந்த எல்லாப் பெண்களும் ஆண்களில் பாதிப் பேரும் அங்கு வந்திருந்தோம். காவற்காரர் ஒரே பரபரப்போடு காணப்பட்டனர். எங்களையெல்லாம் அவர்கள் சரிவர காவல் காத்துக்கொள்ளக்கூட முடியவில்லை. புகைவண்டிப் பிரயாணத்தின் போது சில கைதிகள் காவற்காரருக்குத் தெரியாமல் தப்பி ஓடிவிட்டார்கள். புகைவண்டி நிலையத்தினின்று நாங்கள் காட்டு வழியாக, ஒரு பாசறைக்கு நடத்திச் செல்லப்பட்டோம். சரியாக நடந்து வராத வர்களை, பட்டாள வீரர்கள் முதுகில் குத்தி வதைத்தார்கள்.

நாசி வீரர்களின் அட்டூழியங்களுக்குப் பயந்து, யாவரும் தங்கள் பலவீனத்தையும் வியாதி

களையும் மறந்து, விரைந்து நடந்துவந்தார்கள். பட்டாளத்துப் பாசறை வந்ததும், நாங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. பெண்களெல்லாம் நிர்வாண மாகக் குளிக்கும் மண்டபத்திற்குச் சென்று அந்தக் குளிர் நேரத்திலே குளித்தாகவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தக் கொடூரத்தை விட சிவனிங்கன் சிறையில் நாங்கள் பட்ட பட்டினிப் பசி பரவாயில்லையே என்று கதறினோம். இதை விட ஆட்டுக்குட்டிபோல கொல்லப்பட்டாலும் பரவாயில்லையே என்று பதறி, பதறி நின்றோம்.

நல்லவேளையாக பெத்சீயும், நானும் ஒன் றாய் இருந்தோம். ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு எங்களை நாசி போர்வீரர்களின் கொடுமை யினின்று தப்புவித்துக் கொண்டோம். நீராடும் மாதரை நாசி போர்வீரர்கள் முறைத்து, முறைத்துப் பார்த்து நின்றனர். கடவுள் கிருபையால் நாங்கள் அந்தக் கொடுமையினின்று தப்பித்துக் கொள்ள முடிந்தது. காரணம், நானும், பெத்சீயும் குளிக்க வேண்டிய முறை வருவதற்குள், "குளிப்பதை நிறுத் துங்கள்" என்ற கட்டளை பிறந்துவிட்டது. அப் பப்பா! ஆண்டவர் எங்களை அற்புதமாகக் காத்து விட்டார். கடவுளுக்கே நன்றி! வணக்கம்!

நான் இப்பொழுது ஓர் அனாதைபோல் தன்னந்தனியாகச் சிறைவாசம் செய்யாது நூற் றைம்பது பெண் கைதிகளோடு, சிறைவாசம் செய்ய நேரிட்டது. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கொண்டோம். ஒருவர் கவலையை மற்றவர் ஆற்றித் தேற்றிக்கொள்ள முயன்றோம்.

பெத்சீக்கும், எனக்கும் சிறை வாழ்க்கையில் ஒரு புதுயுகம் மலர்ந்தது. காரணம், அநேக பெண் கள் தங்களுடைய ஆற்றோணா அல்லல்களை எங்களிடம் சொல்லி ஆற்றிக்கொள்ள முற்பட்ட னர். நாங்கள் மற்றவர்களுடைய சோகக் கதைகளை எல்லாம் பொறுமையோடு கேட்டுவிட்டுப் பின்னர், இயேசு இரட்சகரைப் பற்றி அவர்களுக்குச் சொல்ல ஆரம்பித்தோம். இவ்விதமாக அந்த நூற்றைம்பது பெண்களுக்குள்ளும் நாங்கள் கிறிஸ்தவத் தொண்டு புரிவதற்கு ஏற்றதொரு வழிவகை பிறந்தது.

பெரியதொரு மண்டபத்தில் நாங்கள் எல்லாரும் ஆடு மாடுகளைப்போல் அடைக்கப் பட்டிருந்தோம். நீண்ட பெஞ்சுகளும், பெரிய மேசைகளும், அந்த மண்டபத்தில் போடப்பட்டி ருந்தன. இந்தக் கரடு முரடான பெஞ்சுகளிலும், மேஜைகளிலும், கைதிகள் அமர்ந்து காலத்தைப் போக்குவது வழக்கம். காலையில் சிறிது உடற் பயிற்சி இருக்கும். அப்பயிற்சியில் சரியாக நடந்து கொள்ளாதவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது.

அதிகம் படிப்பறியாதவர்கள் இந்தப் பாச றைக்குக் காவலாளர்களாகவும், அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அறியாமை யால் நாங்கள் அதிகப் பாடுபடவேண்டியதாய் இருந்தது. அவர்களுக்குப் படிப்பும், பண்பும் இல்லாவிட்டாலும், அதிகார மமதையும், பதவி ஆணவமும், ஈவு இரக்கமற்ற கொடூர நெஞ்சமும் மிகுந்திருந்தன. அது இருள் மக்களின் அதிகார காலம் போல் காட்சி அளித்தது.

அச்சுறுத்தல்

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, வரிசையாக நின்று சிறிது உடற்பயிற்சி பெற்ற பின்னர், நாங்கள் எல்லாரும் கயிறு திரிக்கும் வேலைக்குச் செல்வது வழக்கம். ஒருநாள் என்னை யும் பெத்சீயையும் காவல் தலைவி முன்னால் வரு மாறு பணித்தாள். அவளுடைய கையில் சிவப்புப் பத்திரங்கள் இருந்தன. அதைக் கண்டதும், ஒரு வேலைக்காரப் பையன் அச்சிவப்புப் பத்திரம் விடு தலைப் பத்திரமாக இருக்கலாம் என்று எங்களிடம் கூறினான்.

உடனே, நான் ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்றேன். என்னுடைய உடைமைகளில் சில

வற்றைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்தேன். அவர்களுக்குப் பிரிவு வந்தனம் செலுத்துங்கால், எங்கள் கண்களில் நீர் ததும்பியது. நாங்கள் கைதிகளோடு அவ்வளவு அன்போடு பழகி இருந்தோம். "உங்களுக்கும் சீக்கிரத்தில் விடுதலை கிடைக்கும்" என்று உரைத்தேன். யுத்தம் சீக்கிரம் முடிந்துவிடும் என்று கூறினேன். நீங்கள் விடுதலை பெற்றபின் எங்கள் வீட்டிற்கு விருந்துக்கு வரவேண்டும் என்று அவர்களை அழைத்தேன். சிறையில் நெடுங்கால அனுபவமுள்ள சிலர், அச்சிவப்புப் பத்திரம் விடுதலைப் பத்திரம் அன்று; ஆபத்துப் பத்திரமாய் இருக்கலாம் என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். நான் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. எப்படியும் விடுதலை கிட்டிவிடும் என்ற நம்பிக்கையோடிருந்தேன்.

பெத்சீயும் நானும், தோளோடு தோள் சேர்த்து, கையோடு கை இணைத்துக்கொண்டு, கம்பீரமாக, அந்தக் காவல் தலைவியின் அலுவலகம் சென்றோம். நாங்கள் அலுவலகம் சென்றதும், எங்களுடைய சொந்த உரிமைப் பொருட்களான கடிகாரம், மோதிரம், பணம் முதலியவை எங்களிடம் பத்திரமாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. இந்தப் பொருட்களையெல்லாம் நாங்கள் சிறையில் புகுந்ததும், எங்களிடமிருந்து பறித்து வைத்திருந்தார்கள். அப்பணத்தைக் கொண்டு, உல்லாசமாக, உரிமையுடன் விடுதலை பெற்றவர்களாய் வீட்டுக்குச் செல்லலாம் என்று கற்பனைக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தோம்.

எங்கள் கற்பனைக் கோட்டையிலே இடி வந்து வீழ்ந்ததுபோன்று, ஓர் துயரச் செய்தி எங்கள் காதுக்கெட்டியது. இவ்விதச் சிவப்புப் பத்திர அறிவிப்புபெற்ற பல யூதர்களும், யூதர்களை ஆதரித்தவர்களும் உடனடியாக விடுதலைபெறாது, ஒரு பயங்கர மரண இருள் செறிந்த கிடங்கினுள் தள்ளப்பட்டார்கள். சிலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

நாங்களும், ஒருவேளை உடனே சுட்டுக் கொல்லப்படலாம், அல்லது அந்த அபாயக் கிடங்கினுள் தள்ளப்படலாம். அந்த அபாயக் கிடங்கினின்று உயிரோடு வெளியே வந்தவர்கள், அநேகமாக, ஒருவரும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாங்கள் இருவரும் மரணத்திற்கு எங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தோம். "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உனக்கு மறு உத்தரவு அருளிச் செய்து உன்னை விடுவிப்பேன்" என்று வாக்குரைத்துள்ளவரை நோக்கி ஜெபித்து அபயமிட்டேன். ஆண்டவர் எங்கள் அபயக்குரலைக் கேட்டார். ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது.

திடீரென்று ஆகாயத்தை ஆங்கில ஆகாயக் கப்பல்கள் கவிந்து கொண்டன. காது செவிடாகும்படியான குண்டோசை பேரிடி ஓசைபோல் அப்பிராந்தியம் எங்கும் அதிர்ந்து நின்றது. எங்கள் உச்சி பிளந்துவிடுமோ என்று அச்சமுறத்தக்கதாக, மாபெரும் குண்டு வீச்சு நடந்தது. சிறைச்சாலை தரைமட்டமாகி விடுமோ என்று பயப்படத்தக்கதாக, பயங்கர குண்டுவீச்சு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே முழக்கம்! எங்கணும் ஒரே குழப்பம்! இந்தச் சிறையிலும் குழப்பம்! சிறை அதிகாரிகளுக்கு மதிமயக்கம்! எங்களை என்ன செய்வதென்று தெரியாது, தெய்வாதீனமாக, மரணக்கிடங்கினுள் தள்ளாமல் அருகே இருந்த உகட் பாசறைக்குச் செல்லவிட்டுவிட்டார்கள்.

நாங்கள் இப்பொழுதிருந்த இந்தப் பாசறையில், சற்று விடுதலை சூழ்நிலை நிலவியிருந்தது. ஏதோ ஒருவாறு தற்சமயம் தெய்வ கிருபையால் உயிர் தப்பிக்கொண்டோம் என்று பெருமூச்சுவிட்டு, கர்த்தராகிய இயேசுவை இதய பூர்வமாக வாழ்த்தி வணங்கினோம். அவர் அதிசயமானவர் என்று போற்றிப் புகழ்ந்தோம். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று, மனமாரப் பாராட்டி மகிழ்ந்தோம்.

(தொடரும்)

வாலிபர் பகுதி

Moses' enduring faith

Heb.11:23 says, *"By faith Moses, when he was born, was hid three months of his parents, because they saw he was a proper child; and they were not afraid of the king's commandment."*

It is really the faith of Moses' parents that is brought out in this verse. When they looked on their baby, they realized that he was a beautiful child. It should be understood that Moses had more than physical beauty. They saw Moses to be an extraordinary child whom God had marked and so he was a chosen child for a special mission. God watched with special care and concern as the child was safely deposited in a basket that floated on the river Nile. They flouted the King's command and therefore they hid the child for three months. Their faith rested on the fact that God would work out miraculously to fulfil His purpose regarding Moses.

Heb.11:24 renders thus: *"By faith Moses when he was come to years, refused to be called the son of Pharaoh's daughter."*

By faith Moses was able to make several renunciations. Though he was brought up on the lap of luxury in Pharaoh's palace, his heart was not in it, because he was assured of all things that men strove for. He learned that possessing sinful pleasures would bring only misery and that forsaking them would bring rest. He was uncomfortable in the palace.

First of all, he refused Egypt's fame. He had a place of honour in the social elite because he was the adopted son of Pharaoh's daughter. He even had the chance of becoming Pharaoh's successor. But he had been born of better blood. From his nobility he could not step down to Egypt's royalty. In his adult years he made his choice. He would not hide his true nationality to win a few short years of earthly fame.

Heb.11:25-*"Choosing rather to suffer affliction with the people of God, than to enjoy pleasures of sin for a season;"*

Secondly, he repudiated the pleasures of Egypt. He identified himself with the suffering people of God. As a result, he ignored the fleeting satisfaction of his appetites. He realized that his sympathy for the suffering people of God would bring rich dividends. He deemed it an honour to share ill-treatment with his own people. This was a greater pleaure to him than dissipation in Pharaoh's court.

Heb.11:26-According to this verse, Moses esteemed reproach for Christ's sake better than the treasures in Egypt. He had respect unto the recompense of reward.

Thirdly, Moses turned his back on the treasures in Egypt; the fabulous treasure-houses of Egypt did not attract him. To him, they were worthless like baubles and trinkets in the light of eternity. So he chose to suffer the same kind of reproach as the Messiah. He valued loyalty to God and love for his people more than the opulence of Pharaoh. He knew that those things would perish

after sometime and that they could never sustain him.

Heb.11:27-*"By faith he forsook Egypt, not fearing the wrath of the king: for he endured, as seeing Him who is invisible"*.

Fourthly, He was bold enough to snap ties with Egypt's monarch. He left the land of bondage, heedless of the king's anger. Needless to say, it was a clear break from the politics of the world. He feared Pharaoh so little because he feared God so much. He fixed his eyes on *"the blessed and only Potentate, the King of kings, and Lord of lords; Who only hath immortality, dwelling in the light which no man can approach unto; whom no man has seen, nor can see: to whom be honour and power everlasting. Amen"* (I Tim. 6:15,16). To Him be glory for ever.

Heb.11:28-Finally Moses had the holy audacity to reject the religion followed by the people of Egypt. By instituting the passover and by sprinkling blood, he deliberately separated himself from Egyptian idolatry for ever. The Bible records the fact that worshipping idols provokes the Lord. Ps.106:36-38 render, "The Israelites served their idols which became a snare to them. They even sacrificed their sons and their daughters to demons and shed innocent blood and the land was polluted with blood." Moses dared to stoutly oppose all forms of Egypt's religion. For him salvation was through the blood of the lamb, not through the waters of the Nile. As a result, the firstborn of Israel were spared while the firstborn of Egypt were slain by the destroyer. In conclusion, I must say that without faith, it is impossible to please God.

சிறுவர் பகுதி

வாக்குத்தத்தத்தைச் சுதந்தரித்துக்கொள்

"நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி.12:2).

கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு எங்களது புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த வருடம் முழுவதும் கர்த்தர் உங்களுக்கு அநேக ஆசீர்வாதங்களைப் பொழிந்திருக்கக்கூடும். அவ்வாறே, இப்புதிய ஆண்டிலும் கர்த்தர் உங்களை நன்மையினாலும் கிருபையினாலும் நிறைத்து, மிகுந்த ஆசீர்வாதங்களால் நிரப்புவாராக.

ஆண்டுதோறும் புதிய புதிய வாக்குத்தத்தங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளுகிறீர்கள். அவற்றை விசுவாசித்து, சுதந்தரித்துக்கொள்ளப் பிரயாசப்படுங்கள். இப்புத்தாண்டிலும் இதோ, உங்களுக்கோர் புதிய கதை! படியுங்கள்; பயனடையுங்கள்.

"ஷீபா குட்டி! இங்கே ஓடிவா! பாட்டியம்மா உனக்குப் பலகாரம் செய்து வைத்திருக்கிறார்கள். மணி ஆகிவிட்டது. இப்படிக் காலை உணவையே சாப்பிடாமல் விளையாடிக்கொண்டிருந்தால் உடம்பு என்னத்துக்காகும்?" என்று கரிசனையோடு கேட்டார்கள் ஷீபாவின் தாயார்.

"அம்மா, அம்மா! please, இன்னுமொரு அரை மணி நேரம்; இன்றும் நாளையும்தான்; பின்பு நாம் புறப்படவேண்டுமே" என்று கெஞ்சினாள் ஷீபா.

கிறிஸ்துமஸ் விடுமுறைக்குத் தன் பாட்டியின் வீட்டிற்குத் தன் பெற்றோருடன் வந்திருந்தாள் ஷீபா. அவள் எட்டு வயது நிரம்பிய சிறுமி. அவள் சுட்டியான பெண். ஆகையினால், விடுமுறையின் இறுதி நாள் வரையிலும் தடையின்றி விளையாட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாள்.

அவள் பாட்டியின் வீடு ஒரு கிராமத்தில் இருந்தது. கிராமச் சூழ்நிலையில் மயங்கியவளாய்,

மற்ற கிராமத்துப் பிள்ளைகளைப்போலவே மரம் ஏறவும், கிராமியப் பாடல்களைப் பாடவும் கற்றுக் கொண்டாள். அதுமட்டுமல்ல, தன்னோடு விளை யாடும் மற்ற பிள்ளைகளுக்கு, இயேசு கிறிஸ்து வைப்பற்றியும், வேத வசனங்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் சொல்லிக்கொடுத்தாள்.

அன்று புத்தாண்டானதால் அனைவரும் இரவு ஆராதனைக்குச் சென்று, புதிய ஆண்டுக் கான வாக்குத்தத்தத்தைப்பெற்று வந்திருந்தனர். ஆனாலும், இரவில் கண் விழித்த சோர்வைக்கூட பொருட்படுத்தாமல் விளையாடிக்கொண்டிருந்தாள் சிறுமி ஷீபா.

ஒருவழியாகத் தன் விளையாட்டை முடித் துக்கொண்டு, காலை சிற்றுண்டியைச் சாப்பிட அமர்ந்தாள். அப்பொழுது அவள், “அப்பா! இந்த வருடத்தின் வாக்குத்தத்தம் என்னவென்று சொல் லுங்கள் பார்க்கலாம்?” என்று சவால் விட்டாள். உடனே அவள் அப்பா, “*நீ ஆசீர்வாதமாய் இருப் பாய்*” என்று கூற, “ஆதியாகமம் 12:2” என்று சொல்லி முடித்தாள் ஷீபா.

பின்பு, தன் பாட்டியம்மாவிடம் திரும்பி, “பாட்டிம்மா! சாப்பிட்டவுடன் நானும் என் நண்பர்க ளும் ஆற்றங்கரைக்குச் சென்று விளையாடலாமா? இப்போது ஆற்றில் தண்ணீர் ஓடவில்லை அல் லவா? அங்குள்ள நாவல்மரத்தின் பழங்களைப் பறித்துச் சாப்பிடப்போறோம். அதுமாத்திரமல்ல, இந்த வசனத்தையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பேன்” என்று கொஞ்சலாகக் கெஞ்சினாள் ஷீபா.

அவள் பாட்டியும், “சரி” என்று சொல்ல, மற்றப் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு ஆற்றங்கரையை நோக்கி ஓடினாள் ஷீபா. நன்றாக விளையாடிவிட்டு, நாவற்பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டே, இந்த வருட வாக்குத்தத்த வசனத்தை அவர்களுக்கு விளக்க விரும்பினாள். நம் மூல மாகத்தான் அநேகர் ஆசீர்வதிக்கப்பட முடியும் என்ற சத்தியத்தை, ஒரு மூத்த விசுவாசியைப்போன்று எடுத்துக் கூறினாள் ஷீபா.

அப்பொழுது அவர்களில் ஒருவன், “ஏய்! பைத்தியம் வருது, போகலாம் வாங்க” என்று குர லெழுப்ப, அத்தனைச் சிறுவர், சிறுமியரும் ஷீபாவை இழுத்துக்கொண்டு ஓட எத்தனித்தனர். ஏன் ஓடு கிறார்கள்? என்று விளங்காததால், ஷீபா மட்டும் அவ்விடத்திலேயே நின்று, மெள்ளத் திரும்பிப்பார்த் தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளைப் பயத் தில் உறையவைத்தது. பரட்டைத் தலையுடனும், அழுக்குத் துணியுடனும் கைகளை அகல விரித்துக் கொண்டு, பயமுறுத்தும் பாவனையில் ஓடி வந்து கொண்டிருந்தான் சிறுவன் ஒருவன்.

அவனைப்பற்றி ஷீபா கேள்விப்பட்டிருந் தாளே ஒழிய, அந்நாள்வரை அவள் அவனைப் பார்த்ததில்லை. அவன் ஒரு புத்தி சுயாதீனமற்ற அனாதைச் சிறுவன். அவனை ஆதரிக்க ஒருவரு மில்லை. ஆகவே, அவன் தோற்றமும் அவனைப் பைத்தியக்காரனாக்கியது.

சிறுவர்கள் அவனைப் பார்த்தாலே கற் களை எறிந்து, பரியாசம்பண்ணுவதால், அவர் களைக் கண்டவுடன் அவனும் பயமுறுத்துவான். அப்படிப் பயமுறுத்தவே அவன் ஓடி வந்தான். அவனை அருகிலே கண்டும் ஷீபா பயப்பட வில்லை; மாறாக, அவளது இளம் இருதயம் அவ னுக்காகப் பரிதபித்தது. ஆகவே, தன் கையிலிருந்த நாவற் பழங்களை அவனிடம் நீட்டி, “உனக்குப் பசிக் கிறதா? இந்தா, இதை எடுத்துக்கொள்” என்றாள் ஷீபா.

அவைகளை அவன் அவளது கையிலிருந்து பிடுங்கி, அவசரம் அவசரமாகச் சுவைக்க ஆரம்பித் தான். அப்பழங்களின் சாறு அவன் தாடையில் வழிந்ததால், அவன் வாயும் தாடையும் ஊதா நிற மாய்க் காட்சியளித்தது.

அப்பொழுது ஷீபா, “என்னோடு வா! உனக்குச் சாப்பாடு தருகிறேன்” என்று செய்கை காட்டி, சத்தமாகக் கூறினாள்.

அவனும் அவளுக்குக் கீழ்ப்படிந்து, மேய்ப் பனைப் பின்தொடரும் ஆட்டைப்போல ஷீபாவின்

பின்னே நடந்துசென்றான். அவளைத் தனியே விட்டுச் சென்ற பிள்ளைகள் ஆங்காங்கே நின்று, ஆச்சரியத்தோடு அக்காட்சியைக் கண்டனர்; மெள்ள, மெள்ள ஷீபாவின் வீட்டை வந்தடைந்தனர்.

அவனை ஷீபாவோடு கண்ட அவள் பாட்டியம்மா கோபத்துடன், "ஷீபா! அவன் பைத்தியம்! ஏன் இங்கு அழைத்து வந்தாய்? டேய்! வெளியே போடா!" என்று விரட்டினார்கள்.

ஷீபா, "பாட்டிம்மா! அவனை விரட்டாதீங்க. இன்றைக்குத்தானே, "நாம் ஆசீர்வாதமாய் இருப்போம்" என்று நம் போதகர் சொன்னார். அவனுக்குச் சாப்பாடு கொடுங்கள்; அல்லது என்னுடைய பங்கை எடுத்து, அவனுக்குக் கொடுத்துவிடுங்கள்" என்றாள் தீர்க்கமான குரலில்.

இதனைக்கேட்ட பாட்டியம்மாவின் கண்களில் கண்ணீர் மல்கியது. "ஷீபா குட்டி! என்னை மன்னித்துக்கொள்; எனக்கு ஒருபெரிய பாடமே புகட்டிவிட்டாய். இனி வாக்குத்தத்தத்தைக் கேட்கிறவளாய் மாத்திரமல்லாமல், அதைச் சுதந்தரித்துக் கொள்பவளாகவும் இருப்பேன்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினார்கள் பாட்டியம்மா.

அச்சிறுவனைக் குளிக்க வைத்து, ஆடைகளை மாற்றி, அவனுக்கு உணவளித்தார்கள். அவன் பசியோடு சாப்பிடுவதைக் கண்ட அனைவரின் கண்களும் கலங்கின.

அப்பொழுது அவளுடைய அப்பா, "ஷீபா, கவலைப்படாதே! இவனை நம்மோடு அழைத்துச் சென்று, அவனுக்கேற்ற காப்பகத்தில் சேர்த்துவிடலாம்; அவனது வருங்காலம் ஆசீர்வாதமாய் இருக்கும்" என்றார்.

ஷீபா ஒரு குதி, குதித்து, "அப்பா, நீங்க ரொம்ப நல்லவங்க" என்று சொல்லி, அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள்.

புது வருடத்தின் முதல் நாளிலேயே, அவ்வருடத்தின் வாக்குத்தத்தத்தைத் தன் மூலமாக, இயேசு அப்பா நிறைவேற்றினதை எண்ணி, ஷீபா மகிழ்ந்தாள். *"நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்"* (ஆதி. 12:2) என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

என் பிரியமான பிள்ளைகளே! நீங்களுங்கூட இந்தப் புதிய வருடத்திற்கான வாக்குத்தத்தத்தைப் பெற்றிருப்பீர்களன்றோ? இத்தனை வருடம் வாழ்ந்ததைப்போன்று, வாக்குத்தத்தத்தைக்குறித்து நிர்விசாரமாயிராமல், விசுவாசித்து, அதைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். இந்தப் புதிய ஆண்டிலும் கர்த்தர்தாமே உங்களோடிருந்து, மிகுந்த ஆசீர்வாதங்களால் உங்களை நிரப்பி, அநேகருக்கு உங்களை ஆசீர்வாதமாய் மாற்றுவார். நம்புகிறீர்களா?

சாட்சிப் பகுதி

கடந்த மார்ச் மாதம் டாக்டர்கள் என்னைப் பரிசோதித்து, என் வயிற்றில் கட்டி இருப்பதாகவும், உடனே லாப்ராஸ்கோப்பி மூலம் அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்றும் கூறினார்கள். என் உடலில் இரத்த அணுக்களில் உறையும் தன்மை குறைவாக இருந்ததாலும், அறுவை சிகிச்சையின் போது உயிருக்கு ஆபத்து நேரிடும் வாய்ப்பு அதிகமாக உண்டென்பதாலும், டாக்டர்கள் அறுவை சிகிச்சையைத் தள்ளிப்போட்டுக் கொண்டே போனார்கள்.

இரத்தம் உறைவதற்காகப் போடப்படும் ஊசியின் விலை மிகவும் அதிகமாக இருந்தபடியால் கர்த்தர் எங்கள் தேவைகளைச் சந்திக்கவும், அறுவை சிகிச்சையின்போது எந்தவித அசம்பாவிதமும் நடக்காமலிருக்கவும், சங்கிலித் தொடர் ஜெபத்தில் சொல்லி ஜெபித்தோம். கர்த்தர் எல்லோருடைய ஜெபத்தையும் கேட்டு அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்துத்தந்தார். மருத்துவரே அதிசயிக்கும் வண்ணமாக இரத்தப்போக்கை நிறுத்தினார். பொருளாதாரத் தேவைகளையும் சந்தித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

ஜெசிந்தா பீட்டர்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். நான் அநேக நாட்களாக வியாதிப்பட்டிருந்தேன். ஆகாரம் உட்கொள்ள முடியவில்லை. எதைச் சாப்பிட்டாலும் வாந்திபண்ணிவிடுவேன். நாளுக்கு நாள் பெலவீனப்பட்டேன். பின்பு டாக்டரிடம் சென்று பரிசோதித்தேன். அவர், எனது குடலில் அடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்றும், அதனை ஆபரேஷன்பண்ணி அகற்றவேண்டும் என்றும் கூறினார்.

ஆபரேஷன் செய்வதற்கு ஒன்றரை லட்சம் செலவாகும் என்று மருத்துவர் கூறினார். எங்கள் பணத்தேவைக்காக ஜெபித்தோம். ஜெபத்தைக் கேட்கிற தேவன் பணத்தேவைகளைச் சந்தித்தார். ஆண்டவரிடம் பொருத்தனை செய்து ஜெபித்தேன். "இந்த ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்தால் நான் சபையில் சாட்சி சொல்லி, உமது நாமத்தை மகிமைப்படுத்துவேன்" என்றேன். அதன்படி கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு ஆபரேஷன் வெற்றிகரமாக முடிய கிருபை செய்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

எஸ். பகவத் சிங்

சபையின் செய்திகள்

1. அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை

2008, டிசம்பர் திங்கள் இரண்டாம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் தலைமைச் சபை ஊழியர்களின் கூட்டம் நடந்தது.

துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தின தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், அப்போஸ்தலர் 20:24 வசனத்தை மையமாகக்கொண்டு ஊழியத்தை முற்றும் நிறைவேற்ற முடியாதபடி ஏற்படும் தடைகளைக்குறித்து விளக்கினார். பின்னர், பதினைந்து சிறு சிறு குறிப்புகளை அளித்து, அவைகளுக்காக ஊழியர்கள் தங்களைத் தனித்தனியாக, அர்ப்பணித்து ஜெபிக்கும்படி வழிநடத்தினார்.

தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர், மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது.

2. அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் தென்னிந்திய கிளைச் சபைகளின் ஊழியர்களின் கூடுகை

2008, டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் தென் இந்திய கிளைச் சபை ஊழியர்களின் கூடுகை கூடிற்று.

போதகர் தாமஸ்ராஜ் அவர்கள் துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். பின்னர், 1 கொரிந்தியர் 9:5 வசனத்தை மையமாகக் கொண்டு, தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், "ஊழியர்களாக விளங்கும் கணவன், மனைவியர் இணைந்து, பணியாற்ற வேண்டிய ஊழியங்கள்" என்ற தலைப்பில் ஆறு குறிப்புகளைப் போதித்தார்.

ஊழியத்தில் கற்பு வேண்டும் (1 தீமோ. 4:12) என்றும், ஊழியத்தில் கடின உழைப்பு தேவை (மத்.9:35) என்றும், ஊழியம் அபிஷேகிக்கப்பட்ட ஊழியமாகக் காணப்படவேண்டும் (அப்.10:38) என்றும், உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும் இலக்குடன் ஊழியஞ்செய்தல்வேண்டும் (அப்.11:19) என்றும், விசுவாசத்தோடு ஊழியஞ்செய்தல் வேண்டும் (ஆதி.13:14-17) என்றும், இயேசுவின் அன்பினால் நிறைந்து, ஊழியஞ் செய்தல்வேண்டும் (உன்.3:1-4) என்றும் விளக்கினர்.

பின்னர், போதகர் தாமஸ் ராஜ் அவர்கள், ஆதியாகமம் 49:26 ஐ மையமாகக் கொண்டு, "ஊழியத்தில் விசேஷமாக நிறைவேற்றவேண்டிய கடமைகள்" என்ற தலைப்பில் செய்தி அளித்தார்.

பெருகுகிற ஊழியம் (ஆதி.30:24), கர்த்தர் நம்மோடிருக்கும்படியான ஊழியம் (ஆதி.39:3,21, 23), யோசேப்பின் தனித்தன்மையைப் பின்பற்றும் ஊழியம் (ஆதி.37:2), யோசேப்பைப்போல பரம தகப்பனுக்குக் கீழ்ப்படியும் ஊழியம் (ஆதி.37:2), கடின உழைப்புடன்கூடிய ஊழியம் (ஆதி.37:14-17) போன்ற கருத்துக்களைத் திறம்பட எடுத்துரைத்தார்.

இதையடுத்து, ஊழியர்களது குழந்தைகள் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டனர். மற்றும் சில விசுவாசிகள், ஊழியத்திற்கென்று புதிதாகப் பிரித்தெடுக்கப்பட்டனர். திருவிருந்து கொடுக்கும்படிக்கும், ஞானஸ்நானம் கொடுக்கும் படிக்கும் சில கிளைச் சபைப் போதகர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.

கடைசியாக, ஊழியர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட தேவனுடைய திருப்பந்தியிலும் அனைத்து ஊழியர்களும் பங்கேற்றனர். தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபத்தோடு, மதிய உணவு வழங்கப்பட்டுக் கூட்டம் ஆசீர்வாதத்துடன் முடிந்தது.

News

மும்பைத் தாக்குதல் மற்றும், இது போன்ற கொடூரமான தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விவாதம், பார்லிமென்டின் இரு சபைகளிலும் நேற்று நடைபெற்றது. அப்போது, மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் பேசியதாவது:

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழித்துக் கட்ட, "தேசிய புலனாய்வு அமைப்பு" என்னும் ஒன்றை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதைத்தவிர, ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு கமாண்டோ படைகள் உருவாக்கப்படும். பயங்கரவாதிகள் ஊடுருவலைக் கட்டுப்படுத்தத் தேவையான பயிற்சிகளை அளிப்பதற்காக, 20 சிறப்புப் பயிற்சிப் பள்ளிகளும் திறக்கப்படும். இவற்றின் மூலமாக மாநில போலீசாருக்கும் கமாண்டோ பயிற்சி அளிக்கப்படும்.

பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள் அனைத்தையும் திருத்தம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. பயங்கரவாதத்தைத் தடுப்பது, புலனாய்வு செய்வது, விசாரணை நடத்துவது, தண்டனை வழங்குவது எனப் பல கட்டங்களாகப் பிரித்து, முறைப்படி அணுக, தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வு அமைப்பை உருவாக்குவதற்கான சட்டத்தை, பார்லிமென்டின் நடப்புக் கூட்டத்தொடரிலேயே கொண்டுவர, திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் இதற்கு உதவவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. மும்பை சம்பவத்தில் உளவுத்துறையின் செயல்பாடுகளில் நிறைய குறைபாடுகள், இடைவெளிகள் உள்ளன. உளவுப்பிரிவில் ஏராளமான பணியிடங்களும் காலியாக உள்ளன.

தினமலர், 12.12.2008

அன்பான வேண்டுகோள்

இதுவரை சந்தா கட்டாதவர்கள் சந்தா கட்ட வேண்டுகிறோம். சந்தா கட்டி, இடையில் தொடர்ந்து கட்டாதவர்களும் சந்தா கட்ட வேண்டுகிறோம்.

சந்தா விவரம்

தனிப்பிரதி	ரூ.5/-
ஆண்டு சந்தா	ரூ.50/-
ஆயுள் சந்தா	ரூ.500/-

விடுதலைத்தூதன் வாசகர்கள் அனைவருக்கும் எங்களது இதயங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

We wish you a very Happy New year

The will of God

The will of God will never take you,
Where the grace of God cannot keep you,
Where the arms of God cannot support you,
Where the riches of God cannot meet your needs,
Where the power of God cannot envelop you.

The will of God will never take you,
Where the Spirit of God cannot work through you,
Where the wisdom of God cannot teach you,
Where the army of God cannot protect you,
Where the hands of God cannot mould you.

The will of God will never take you,
Where the comfort of God cannot dry your tears,
Where the Word of God cannot feed you,
Where the miracle of God cannot be done for you,
Where the omnipresence of God cannot find you.
Everything happens for a purpose.

We may not see the wisdom of it all now, but trust and
Believe in the Lord that everything is for the best.

Reg. Number TN/CCN/203/06-08. Licence to the post under WPP No.TN/CCN/85/06-08
Regd. Under Regis. of News paper for India No.(1)1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication : monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai-600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. இயேசுவின் அன் (சாட்சிகள்)
6. எஸ்தர்
7. இயேசு கிறிஸ்து மாறாதவர்
8. ஒளி வீசும் சாட்சிகள்
9. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
10. இயேசு செய்த அற் தங்கள் (சாட்சிகள்)
11. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
12. தசமபாகம் கர்த்தருக்குரியது
13. Jesus Met Me in Jail
14. Spiritual Truths from the Bible
15. Tithe Belongs to God

Book-Rs.10/-

16. அநாதி கிருபை
17. கர்வாலி மரம்
18. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
19. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
20. நீதிமான்கள்
21. கிறிஸ்துமஸ் செய்திகள்
22. இயேசு உயிர்த்தெழுந்தார்
23. நீதியின் சூரியன்
24. பரதேசிகளாகிய நாம்
25. கிறிஸ்துவ குடும்பம்
26. நித்திய பிரதான ஆசாரியர்
27. சபை சபைதானா?
28. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
29. த்தாண்டு தேவசெய்திகள்
30. விழித்திரு
31. சிலுவைக்கு அப்பால்
32. வணக்கம்
33. இரட்சிப்பின் சாட்சிகள்
34. ஜீவனுள்ள சாட்சிகள்
35. அற் த சாட்சிகள்
36. சாட்சிகள்
37. எரி நரகத்திற்குத் தப்பினேன்
38. மாபெரும் மாற்றம்
39. நன்றியுள்ள சாட்சிகள்
40. கல்லூரியில் அற் தங்கள்
41. நற்செய்தி கதைகள்
42. தீப ஒளி
43. வழிகாட்டும் கதைகள்
44. அந்தக் கடிதங்கள்
45. அந்த மயில்கள்
46. கனமான ஊழியம்
47. வெளிச்சம்
48. ஆத்தும நேசர்
49. ஐக்கியம்
50. கொடி
51. இன்னும் சந்தேகமா?
52. அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
53. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
54. மேய்ப்பரின் அறிவுரைகள்
55. முதலாம் ஆதாம்
56. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
57. நீரே என் மேய்ப்பர்
58. தேவ ஊழியம்
59. உத்தம ஊழியன்
60. Eternal Grace
61. The Star
62. The New Year
63. Spiritual Questions
64. The Timely Warning
65. The Blessing
66. Your Response to the Cross
67. The Power of Prayer
68. Springs in the Valley
69. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

70. ஏழு வார்த்தைகள்
71. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
72. இயேசு கூறின உவமைகள்
73. அதிசயமான தேவகிருபை
74. Amazing Grace of God

Book - Rs.20/-

75. என் நேசரின் சத்தம்
76. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள்
77. வாக்குத்தத்த செய்திகள் 2004
78. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
79. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
80. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
81. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
82. கழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
83. கழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
84. ஒருவருக்கொருவர்
85. Successful Ministers of the Lord
86. Messages of God's Blessings 1
87. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

88. A Good Soldier of Jesus Christ
89. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
90. வாக்குத்தத்தச் செய்திகள் 2005
91. வாக்குத்தத்தச் செய்திகள் 2006
92. தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
93. வாக்குத்தத்தச் செய்திகள் 2007
94. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

95. நல்ல போர்ச்சேவகன்
96. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line:
26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622388/26622775 website:www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell:9841429079